# தமிழன் எப்படிக் கெட்டான்?



மொழிஞாயிறு
தேவநேயப் பாவாணர்

# தமிழன் எப்படிக் கெட்டான் ?



மொழிஞாயிறு

## தேவநேயப் பாவாணர்

தமிழியக்கம்

திருச்சிராப்பள்ளி

## வேண்டுகோள்

'பாவாணர் நூல்களைப் படித்துத் தமிழர்கள் பயன்பெற வேண்டும்' என்றார் அறிஞர் அண்ணா 1941 - இல். 'திராவிட மொழிஞாயிறு' எனும் விருது வழங்கிப் பாவாணரைச் சிறப்பித்தார் தந்தை பெரியார் 1956 - இல். பாவாணர் நூல்கள் அனைத்துமே தமிழரை விழிப்புறுத்தித் தமிழினப் பகை முடிக்கும் படைக் கருவிகள். அவற்றுள் ஒன்று 1941 - இல் வெளிவந்த 'தமிழன் எப்படிக் கெட்டான்?' எனும் சிறுப்பெருநூல். 'ஒரே நாடு! ஒரே மொழி!' எனும் மயக்கமூட்டி, மொழித்தேசிய இனங்களை நிலையான அடிமைத்தனத்தில் அமிழ்த்த, 'இனவெறி வல்லரசியர்' முயலும் இன்றைய சூழலில் அதன் தேவை கருதி மீண்டும் வெளியிடுகிறோம். படித்துப் பயன் கொள்க.

**தமிழியக்கம் - 1972**

### பின்னிணைப்பு

1. சூரம்பட்டியின் முதலாசிரியர் மா. இரா. குகநாதப் பிள்ளை பற்றி முதுமுனைவர் இரா. இளங்குமரனார் வழங்கிய எழுத்துரை.
2. முனைவர் கு. திருமாறன் குறித்து முனைவர் இரா. கலைக்கோவனார் வழங்கிய எழுத்துரை.

# முதற்பதிப்பின் முகவுரை

“வெள்ளைக்காரன் உடுத்திக் கெட்டான், துலுக்கன் தின்று கெட்டான், தமிழன் வைத்துக் கெட்டான்” என்பது பழமொழி. இதில், “வைத்து” என்பது புதைத்தும் புதையாதும் பயன்படுத்தாது வைத்தலைக் குறிக்கும். தமிழன் செல்வம் அல்லது பணம் ஆகிய ஒருவகை உடைமையையே வைத்துக் கெட்டதாகப் பொதுவாகக் கொள்ளப்பட்டாலும், உண்மையில் கல்வி, செல்வம் என்னும் இருவகையுடைமையையுமே வைத்துக் கெட்டவனாயிருக்கிறான்.

ஒரு தனிமகன் அல்லது ஒருநாடு முன்னேறுவதற்குக் கல்வி, செல்வம், இரண்டும் வேண்டும். இவற்றுள் ஒன்றிருந்தால் மட்டும் போதாது. தமிழன் இவ்விரண்டுமிருந்தும் கெட்டமை மிகமிக இரங்கத்தக்கது.

ஒருவன் கெடுவது மூவகை; ஒன்று அறிவோ பொருளோ அவை யிரண்டுமோ இல்லாமை; ஒன்று அவையிருந்தும் பயன்படுத்தாமை; ஒன்று அவற்றைத் தவறாய் ஆளுதல். இவற்றுள், தமிழன் கெட்டவகை பின்னிரண்டு மாகும். ஒருவன் ஒன்றை அடைதற்கோ அதைப் பயன்படுத்துதற்கோ உலகில் உடம்போடிருத்தற்கோ அறிவு இன்றியமையாததாதலின், அதைச்சரியாய் ஆளுதல் ஆக்கத்திற்கும் தவறாய் ஆளுதல் கேட்டிற்கும் காரணமாகும். ஆகவே, அறிவைப் பயன்படுத்தற்கும் பகுத்தறிவு வேண்டும் என்பது பெறப்படும். பகுத்தறிவில்லா அறிவு கடிவாளமில்லாத குதிரையும் சுக்கானில்லாத கப்பலும் போலாம்.

தமிழன் ஈராயிரம் ஆண்டுகட்கு முன்னரே, உலகத்தில் பலதுறைகளிலும் தலை சிறந்தவனாயிருந்திருந்தும். பிற்காலத்தில் தன் பகுத்தறிவைப் பயன்படுத்தாது வைத்துக் கெட்டமை. இச்சுவடியில் விரிவாய்க் கூறப்படும்.

**ஞா. தேவநேயன்**

## உள்ளடக்கம்


1. மதப்பைத்தியம் – 01
2. கொடைமடம் – 05
3. இனநலம் பொறாமை அல்லது தன்னினப் பகைமை – 08
4. குறியார்த்தல் – 11
5. துறவியைப் பின்பற்றல் – 16
6. ஆரியம் – 21
7. அரசியற் கட்சிகள் – 27

## 1. மதப் பைத்தியம்

கடவுளை வணங்குவதும் மதவொழுக்கத்தில் உறைத்து நிற்பதும் நல்லதே.

**"கற்றதனா லாய பயனென்கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஅர் எனின்"**

என்றார் திருவள்ளுவர். "ஆண்டவனுக் கஞ்சுவதே அறிவின் தொடக்கம்" என்றார் சாலோமோன் அறிஞர். ஆனால், அளவிறந்த மதப்பித்துக்கொண்டு எங்கே விழுந்து சாகலாமென்று முட்டிக்கொண்டு திரிய, ஒருவருஞ் சொல்லவில்லை. "அளவுக்கு மிஞ்சினால் அமுதமும் நஞ்சு" என்பது மதப்பற்றிற்கும் ஏற்கும்.

பொதுவாக ஒரு மதம் ஏற்படும்போது, அதன் அடியார்கள் அல்லது அதை ஏற்படுத்துவோர் தங்கள் மதக் கருத்துகளையும், தங்கள் முன்னோரைப் பற்றிய சில சரித்திரப் பகுதிகளையும் தொகுத்து நூல்கள் எழுதிவைக்கிறார்கள் அல்லது பாட்டுப் பாடி வைக்கிறார்கள். அவை அம் மதத்திற்கு மறை (வேத) நூல்களாகின்றன. அவற்றில், கலையியல் உண்மைக்கு மாறான சில கருத்துகள் இருக்கலாம்: கலை வரவர வளர்ந்து வருகிறது. கலை வளர்ச்சியடைந்த காலத்தில், அதன் உண்மைக்கு மாறான கருத்துகள் மறைநூல்களில் இருக்குமானால், அவற்றை விலக்கிக் கொள்ளுவது கடமையாகும். **மனிதனுக்கு மதமேயன்றி மதத்திற்கு மனிதன் அல்லன்.** மறைநூலும் கடவுளால் தோன்றியதே; கலைநூலும் கடவுளால் தோன்றியதே. அறிவு பலதுறைப்பட்டது. கடவுளே அறிவுக்கு உறைவிடம். அவர் சித்தாந்த அறிவை மனிதர்க்குப் புகட்டியது போலவே கலையறிவையும் புகட்டிவருகிறார். மறைநூலாசிரியரைப் போன்றே கலைநூலாசிரியரும் கடவுளடியார்கள். ஓர் இசைப்புலவன் எத்துணை வல்லவனாயிருப்பினும், கருவியின் சிறப்புக்குத் தக்கபடியே தன் திறமையைக் காட்ட முடியும். அதுபோலக் கடவுளே அறிவித்தாலும், அது அடியாரின் அறிவுக்கும் திறமைக்கும் தக்கபடியே வெளிப்படும். ஒவ்வொரு துறையிலும்

மனிதன் தன் அறிவை வளர்த்துவருகிறான். அறிவு வளரவளரத் தன் கருத்துகளைத் திருத்திக்கொள்ள வேண்டும். தன் அறியாமையை மதத்தின் மேலேற்றி மதநூலைக் கலைநூலோடு முரண்படக் கூறின், கடவுளின் தன்மைக்கே முரண்பாடு கூறியதாகும். அதோடு கலையும் வளராது, நாடும் கீழ் நிலை யடையும்; அறியாமையும் அடிமைத்தனமும் ஓங்கும்.

சில மதநூல்களில், அவற்றை எழுதியவரின் அறியாமையாலோ தன்னலத்தாலோ, மன்பதைய (சமுதாய) முன்னேற்றத்திற்குத் தடையாயுள்ள சில தீய கருத்துகள் புகுத்தப்பட்டுள்ளன. பிறப்பாற் சிறப்பென்பதும் தாழ்த்தப்பட்டோர்க்குக் கோயிற்புகவு (ஆலயப்பிரவேசம்) இல்லையென்பதும் இத்தகையன. இதனால்தான், மக்கள் முன்னேற்றத்திற்கு மதம் முட்டுக்கட்டை எனச் சிலர் கருதுகின்றனர்.

கடவுள் மக்களெல்லாருக்கும் தந்தை. அவர் மக்களின் அகத்தூய்மையைக் கவனிக்கின்றாரேயன்றிப் புறத்தூய்மையைக் கவனிக்கிறதில்லை. கடவுள் தாழ்த்தப்பட்டோரை ஏற்றுக்கொள்ளத் தயாராயிருப்பவும், தொழுகையாசிரியர் (அர்ச்சகர்) அவர்களை மறுப்பது "சாமி வரங்கொடுத்தாலும் பூசாரி வரங்கொடுக்க மாட்டான்" என்னும் பழமொழியையே விளக்குகின்றது.

சிவனடியாருள் சிறந்தவராகச் சொல்லப்படும் அறுபத்து மூவருள், இயற்பகை நாயனார் சிவனடியார் போல வேடம்பூண்டு வந்த ஒருவனுக்குத் தம் மனைவியைக் கொடுத்ததுமல்லாமல் அதைத் தடுக்க வந்த தம் இனத்தாரையெல்லாம் வெட்டிக் கொன்று முன்பின் அறியாத அக்காமுகனை ஊருக்கு நெடுந்தூரம் யாதோர் இடையூறுமின்றிக் கூட்டிக்கொண்டு போயும் விட்டனர். இது ஒரு பெரிய மானக்கேடு. ஏனாதிநாத நாயனார் தம் எதிரியாகிய அதிசூரனோடு வாட்போர் செய்யுங்கால், அவன் வஞ்சனையால் நீற்றைப் பூசி நெடுநேரம் கேடகத்தால் மறைத்து வைத்திருந்த தன் நெற்றியைத் திடீரென்று காட்ட, அவர் "ஆ கெட்டேன்! இவர் பரமசிவனுக்கு அடியவராய்விட்டார்" என்று வாளையும் கேடகத்தையும் விட்டுவிடக் கருதிப் பின்பு,

"ஆயுதமில்லாதவரைக் கொன்ற குற்றம் இவரை அடையாதிருக்க வேண்டுமென்று" எண்ணி, அவற்றை விடாமல், உண்மையில் எதிர்ப்பவர் போல நடித்து நேரே நிற்க, பழிகாரனாகிய அதிசூரன் அவரை வெட்டிக் கொன்றான். மெய்ப்பொருள் நாயனார் சிவனடியார் போல வேடம் பூண்டு வந்த தம் பகைவனாகிய முத்தநாதனாற் குத்துண்டிறக்கும் போதும், அவனைச் சேதமின்றி ஊருக்கு வெளியே கொண்டுபோய் விடும்படி தம் வாயிற்காவலனாகிய தத்தனுக்குக் கட்டளையிட்டார். இவைபோன்ற சிவனடியார் சரிதங்கள் இன்னும் பலவுள. இவற்றால், சிவனடியாரான தமிழர் தம் உயிரையும் மானத்தையும் பொருட்படுத்தாமல் மதப்பித்தங்கொண்டு பகைவருக்குக்கூட எதையும் கொடுக்கத் தயாராயிருந்தனர் என்பது வெளியாகும். இயற்பகை நாயனார் சரிதம் பெரியபுராணத்தில் மங்கல முடிவாக மாற்றிக் கூறப்பட்டுள்ளது. அது செவிவழக்காய் மட்டும் வழங்கிய காலத்திலேயே இங்ஙனம் மாற்றப்பட்டிருத்தல் வேண்டும், பிராமண வடிவம் கொண்டு அவருடைய மனைவியைக் கேட்கவந்த, சிவபெருமானாகக் கருதப்படுகிறவன் உண்மையில் ஒரு மனிதனாகவேயிருந்திருத்தல் வேண்டும். மேன்மேலும் இனத்தார் எதிர்த்து வந்ததை அக்காமுகன் கண்டஞ்சி இறுதியில் ஓடி ஒளிந்திருக்க வேண்டும். இறுதியில் சிவபெருமான் காட்சி கொடுத்ததாகக் கூறுவது அடியார்க்கெல்லாம் பொதுவாகக் கூறப்படும் மங்கல முடிவு. சிவபெருமானே இயற்பகையாரின் மனைவியைக் கேட்டதாக வைத்துக் கொண்டாலும், அது முடிவிலன்றி முன்னதாகத் தெரியாமையால், சிவனடியார் வேடம் பூண்டுவந்த எவர்க்கும் தம் மனைவியைக் கொடுத்திருப்பார் என்பது வெட்டவெளியாகின்றது. மேலே கூறப்பட்ட மற்ற ஈரடியார்களும் பகைவரென்று தெரிந்த பின்பும் போலிச் சிவவேடத்தாருக்கு இணங்கியமையும் இதை வலியுறுத்தும்.

சில திருப்பதிகளில் தேரோட்டக் காலத்தில் தேர்க்காலின்கீழ்த் தலையைக் கொடுத்திறப்பதும், கும்பகோணத்தில் மகாமகக் குளத்தில் மிதியுண்டு சாவதும், சில கோயில்கட்குப் பிள்ளை வரத்திற்குச் சென்று தெரிந்தோ தெரியாமலோ தம் மனைவியரைக் கற்பழிவிப்பதும் அல்லது

இழப்பதும், கோவில்வழிபாட்டிற்குச் சென்றவிடத்துத் தம் அழகான அருமந்த மகளிரைத் தேவகணிகையராக விட்டுவிட்டு வருவதும், பண்டைத் தமிழருள் பகுத்தறிவற்று மானங்கெட்ட மதப்பித்தர் சிலரின் செயல்களாகும்.

இத்தகைப் பேதையரையே படிமையின் (விக்கிரகத்தின்) பின் மறைந்து நின்று தேவவாக்குப்போற் கூறி ஏமாற்றி, வேண்டியதெல்லாம் பெற்றுவந்தனர் ஒரு சாரார்.

இந்த 20ஆம் நூற்றாண்டிலுங்கூட, சில மதப்பித்தர் ஆங்கிலக் கல்வி சிறப்பப் பெற்றிருந்தும் தாய்மொழி கெட்டாலும் தமது மதம் கெடக்கூடா தென்று கருதி, வேண்டாத வடசொற்களையும் புறம்பான ஆரியக் கொள்கைகளையும் தழுவுகின்றனர். உயிரையும் மானத்தையும் வீணாய் இழக்கத் துணியும் மதப்பித்தர்க்கு இது எம்மட்டு?

**மேலும், தமிழை வளர்ப்பதால் மதம் கெடப்போவதுமில்லை. தாய் மொழியையும் மத்தையும் தூய்மைப்படுத்துவதால் அவை வளர்ந்தோங்குமென்பதையும் தமக்குப் பெருமை உண்டாகும் என்பதையும் அவர் ஆராய்ந்தறிவதுமில்லை; ஆராய்ந்தவர் சொல்லினும் உணர்வதுமில்லை. இத்தகையோர் இருப்பின் என்? இறப்பின் என்?**

சிலர் மதம் பற்றிய வடசொற்கட்குத் தென்சொற்கள் இல்லையென்றும், மதத்துறையில் வடசொற்கள் வந்துதான் ஆகவேண்டுமென்றுங் கூறுகின்றனர். இது தாய்மொழி உணர்ச்சியும், சொல்லாராய்ச்சியும், சரித்திர அறிவும் இல்லாமையால் வந்த கேடு. மேலும், சைவ, மாலியமும் (வைணவம்) அவற்றின் முதல் நூல்களும் தமிழருடையவாயும் தமிழிலும் இருக்க அல்லது இருந்திருக்க, அவை ஆரியர் கொண்டுவந்தவையென்றும், அவற்றின் முதல் நூல்கள் வடமொழி மறைகளேயென்றுங் கொள்கின்றனர். ''தம்மானை யறியாத சாதியார் உளரே!'' இவர்க்கு எத்தனை மொழிநூல்கள் வெளிவந்தென்ன? எத்தனை மொகஞ்சதரோக்கள் அகழப்பட்டென்ன?

வடமொழியிற் சொற்கள் ஆனது போன்றே தமிழிலும் ஆக முடியும். ஈராயிரம் ஆண்டுகளாக வடமொழியைத் தழுவி வந்ததால் தமிழில் சொல்வளர்ச்சியில்லாது போயிற்று. **இன்றும் தமிழர் சிவபெருமானுக்கும் திருமாலுக்கும் அஞ்சுவதினும் மிகுதியாகப் பார்ப்பனருக்கு அஞ்சுவதே தமிழ் வளர்ச்சிக்குத் தடையாயுள்ளது.**

ஒரு நாட்டின் நாகரிக அல்லது முன்னேற்ற நிலைக்கு மதப்பொறுதியும் ஓர் அறிகுறியாகும். பண்டைக்காலத்தில், தமிழ்நாட்டில் தற்கால இங்கிலாந்திற் போன்றே மதப்பொறுதியிருந்துவந்தது. கடைத்தமிழ்ச் சங்கத்தில் சைவர், வைணவர் (மாலியர்), பௌத்தர், சமணர், உலகாயதர் முதலிய பல மதத்தினரும் புலவராயிருந்தனர். செங்குட்டுவன் என்னும் சேர மன்னன் வைணவனாயும் அவன் தம்பி இளங்கோவடிகள் சமணராயும் இருந்தனர். இங்ஙனம் பல மதத்தினரும் ஒற்றுமையாய் வாழ்ந்ததால், தமிழ்நாட்டில் அமைதி நிலவியது. கல்வியும், கைத்தொழிலும், வாணிகமும். அரசியலும் ஓங்கி நாடு நலம்பெற்றது. இக்காலத்திலோ, சில குறும்பர் மதப்பிரிவினை உண்டாக்கித் தமிழ்நாட்டைச் சீர்குலைக்கின்றனர்.

இனி, இக்காலத்தில் சில தமிழர் மதப்பித்திற்கு நேர்மாறாக மதமே இருக்கக்கூடாதென்கின்றனர். மதத்திலுள்ள சில தீய கூறுகளை நீக்குவதற்குப் பதிலாக, மதத்தையே நீக்கவேண்டுமென்பது சோற்றிலுள்ள சில சிறு கற்களை எடுப்பதற்குப் பதிலாகச் சோற்றையே கொட்டிவிடுவதொக்கும்.

## 2. கொடைமடம்

மிகுந்த வளத்தினாலும், முதலியற் ***(primitive)*** குலத்தினாலும், வழிமுறை (பரம்பரை) வேளாண்மையாலும், தமிழர் சிறந்த கொடையாளிகளாயிருந்தது பாராட்டத்தக்கதே. ஆனால், அவருட் சிலர் தகுதி பாராதும் மிதமிஞ்சியும் தானம் செய்தது அங்கணத்திற் கொட்டிய அமிழ்துபோலப் பயன்படா தொழிந்ததன்றி, அவரை மடமையராகவும் காட்டுகின்றது.

கடையெழு வள்ளல்கள் என்று புகழப்படுவாருள், பேகன் என்பவன் தனக்கு அருமையாகக் கிடைத்த ஒரு சிறந்த போர்வையைக் குளிரால் நடுங்குகிறதென்று கருதி ஒரு மயிலின் மீதெறிந்ததும், பாரி என்பவன் ஒரு முல்லைக்கொடிக்குக் கொழுகொம்பில்லையென்று தன் விலையுயர்ந்த தேரை நிறுத்தியதும், தமிழன் கொடைமடத்திற்கு எடுத்துக்காட்டு (உதாரணம்)களாகும்.

தமிழன் மதத்திலும் கொடையிலும் பைத்தியங் கொண்டவன் என்று தெரிந்த பார்ப்பனர், மதாசிரியராகிக் கோயில் வழிபாட்டாலும் இல்லச் சடங்காலும் ஏராளமாய்க் காணியும் பொருளும் தேடிக்கொண்டனர். சில அரசர்கள் அளவிறந்த தமிழ்ப் பற்றுடையவராயும் புலவரைப் போற்றுபவராயுமிருந்ததால், சில பார்ப்பனர் தமிழ்ப் புலவருமாகிப் பல்லாயிரக்கணக்கான பொற்காசுகளையும் நூற்றுக்கணக்கான ஊர்களையும் பரிசிலாகப் பெற்றிருக்கின்றனர். இது குற்றமன்று; ஆனால், இங்ஙனம் அவர் பெறுதற்கு, அவர்தம் குலத்திற்கு உயர்வுதேடிக் கொண்டமையும் ஒரு காரணம் என்பதையும், அவர் தமிழ் கற்றது பெரும்பாலும் தம் பிழைப்பிற்கும் தமிழ்நாட்டில் தமக்கு ஆதிக்கம் தேடிக் கொள்வதற்கும் ஆரியத்தைச் சிறிது சிறிதாய்ப் புகுத்தித் தமிழைக் கெடுத்தற்குமே என்பதையும், அறிய வேண்டும்.

“ஆற்றிலே போட்டாலும் அளந்து போடு” என்பது பழமொழி. வளவனாயினும் அளவறிந் தளித்துண்ண வேண்டுமன்றோ ? சில தமிழரசரோ அங்ஙனமன்றித் தமக்குரிய நாடு நகரையும் செல்வமனைத்தையும் தானம் செய்து விட்டுப் பின்பு திண்டாடியிருக்கின்றனர். இதைப் புறநானூற்றிற் காணலாம். அன்றியும் சிலர் தகுதியறிந்தும் தேவையறிந்தும் கொடை செய்வதுமில்லை. நூறு பொற்காசளிக்க வேண்டிய இடத்தில் பதினூறாயிரம் பொற்காசளிப்பதும், குடிக்கக் கஞ்சியில்லாமற் போயிரந்தவனுக்கு நூற்றுக்கணக்கான யானைகளைக் கொடுப்பதும். அவர் வழக்கம்.

**இக்காலத்திலும், ஒருவன் பிறக்கு முன்பே தொடங்கி, அவன் இறந்தபின்பும், ஒரு குலத்தாருக்கே தானஞ்செய்வது தமிழரின்**

**பேதைமையாகும்.** இதனால், வடநாட்டினின்று கையுங் காலுமாய் வந்த ஒரு சிறு கூட்டத்தினர் செல்வத்தால் சிறந்து வாழ, தமிழருட் பெரும்பாலார் வறியராய் வருந்துகின்றனர்.

"ஏதிலார் ஆரத் தமர்பசிப்பர் பேதை
பெருஞ்செல்வம் உற்றக் கடை" (குறள். 837)

பார்ப்பனர் தாம் பெற்ற செல்வத்தைத் தம்மாலியன்றவரை தங்குலத்தாருக்கே பயன்படுத்துவது வழக்கம். இதனால் அவரிடம் செல்லும் பணம் அவர்க்குள்ளேயே சுற்றிக்கொண்டு தமிழர்க்குப் பெரிதும் பயன்படாது போகின்றது.

ஒரு பார்ப்பனர் ஒரு கொடையாளியொடு பழகப்பெறின், அவர் கொடையைப் பெரும்பாலும் பிற குலத்தார் பெறாதபடி, தங்குலத்தார்க்கே இயன்றவரை வரையறுத்துக் கொள்வது அவர் இயல்பு. சில அறநிலையங்களில், தமிழ் இரவலர் (பிச்சைக்காரர்) வெளியே நின்று பட்டினியும் பசியுமாய் ஒரு கவளம் பெறாது தவிக்க, ஒரு சாரார் உள்ளேயிருந்து கொழுக்கக் கொழுக்கச் சிறந்த வுண்டிகளை உண்கின்றனர். இவற்றிற்குச் செல்லும் செலவோ தமிழருடையவை.

பார்ப்பனருக்கே ஒன்றும் கொடுக்கக்கூடாதென்று யாம் கூறவில்லை. அவரது தந்நலத்தையும் தமிழர் நலம் பேணாமையையுமே கண்டிக்கின்றோம்.

இக்காலத்தில், தமிழ்நாட்டில் கொடையாளிகளைக் காண்பது அரிதாயிருக்கின்றது. எங்கேனும் அத்திபூத்தாற்போலும் கார்த்திகைப் பிறை கண்டாற் போலும் ஒருவர் தோன்றின், அவர் இலக்கக்கணக்காகவும் கோடிக்கணக்காக வும் ஆங்கிலக் கல்விக்கே கொட்டிக் கொடுக்கின்றவராயும், தமிழை அவமதிக்கின்றவராகவும் இருக்கின்றனர். திருப்பனந்தாள் காசிமடத் தம்பிரான், திருப்பெருந்திரு காசிவாசி சுவாமிநாதத்தம்பிரான் அவர்கள் தமிழுக்காகப் பல பெரும் பரிசுகள் அளிக்கிறார்கள் என்று மகிழ்ந்திருந்தால், அவர்கள் தமிழ்ப் பகைவர்கட்கும் தமிழைப் பழிக்கும் அல்லது கெடுக்கும் புத்தகவெளியீட்டிற்காகப் பணந்தருவது மிகுந்த வருத்தத்தைத் தருகின்றது.

இந்நிலையில், செட்டிநாட்டரசர் சர் (வயவர்) அண்ணாமலைச் செட்டியார் அவர்கள் அண்மையில் தமிழிசைக்காகப் பதினையாயிரம் உருபா அளித்தது பஞ்சக் காலத்துப் பெய்த பெருமழை போலிருக்கின்றது. ஆனால் இதையும் ஒருசார் பார்ப்பனர் கெடுக்கப் பார்க்கின்றனர்; ஆரியர் இந்தியாவிற் கால் வைக்கும் முன்னமும், தெலுங்கில் இலக்கியம் தோன்றுமுன்னமும், தியாகராய ஐயர் பிறக்கு முன்னமும், தமிழர்க்கு இசைத்தமிழ் இருந்ததென்பதையும், ஐயரவர்கள் தமிழ் நாட்டிற் பிறந்ததினாலேயே அவர்கட்கு இசையறிவு அமைந்ததென்பதையும், இந்திய இன்னிசைக்கு இசைத்தமிழே மூலமென்பதையும், தெலுங்கு தமிழின் கிளைமொழியே என்பதையும் அவர் அறிவாராக.

## 3. இனநலம் பொறாமை அல்லது தன்னினப் பகைமை

உறவின் முறையாலோ குலத்தாலோ மதத்தாலோ நாட்டாலோ தமக்கினமாயினார் நன்றாய் வாழ்ந்தாலும், ஒரு நல்ல பதவியைப் பெற்றாலும், அதைப் பொறாது புழுங்கி அவரைக் கெடுத்துவிட்டு, அயலாரையோ மாற்றாரையோ அவருக்குப் பதிலாய் அமர்த்துவது, இன்றும் தமிழருக்கு வழக்கமாயிருக்கின்றது. இது அவரது நலத்தைக் கொல்லும் நச்சுக் காய்ச்சல்: வலிமையை அறுத்தெறியும் கூர்வாள்,

தமிழரசர்களான சேர சோழ பாண்டியர் மூவரும் ஒற்றுமையாயிருந்த வரையில் அவர்க்கும் தமிழ்நாட்டிற்கும் கேடில்லை. அவர் ஒருவர்மீதொருவர் பொறாமை கொண்டு, தமக்குள்ளேயே போர் செய்யத் தொடங்கியபின், அவரது வலிமை குன்றியது. அருமையான வேலைப்பாடுள்ள பண்டை மாடமாளிகைகளும் கூடகோபுரங்களும் இருந்த இடமும் தெரியாமல் இடிக்கப்பட்டுப்போயின. முத்தமிழரசரும் மறைந்தனர். அவரது அரசியன் மொழியாகிய செந்தமிழும் வரவர மங்கி வருகின்றது. ஓர் அரசன் இன்னோர் அரசனை வென்றபின், அவனது தலைநகரையும் நாட்டையும் எரியூட்டுவதும், அரண்மனையையும் கோட்டையையும் இடித்துவிட்டுக் கழுதையேர் பூட்டிக் கவடி விதைப்பதும் அக்கால வழக்கம்.

தமிழரசர் வலிகுன்றிய பின்னரே, பல்லவர், தெலுங்கர் மராட்டியர் முதலிய வடநாட்டாரும், துருக்கர். ஆங்கிலர், பிரஞ்சுக்காரர் முதலிய மேல்நாட்டாரும், முறையே தமிழ்நாட்டிற் படையெடுத்து அதைக் கைப்பற்றவும், தமிழர் அடிமையரும் வறியருமாகவும் நேர்ந்தது.

இப்போது, தமிழர்க்குள், ஒவ்வொரு தொழிலாளர்க்குள்ளும் பொறாமையிருந்துவருகின்றது. புலவன் புலவனையும், மருத்துவன் மருத்துவனையும், அமைச்சன் அமைச்சனையும் பகைக்கிறான். ஒரே குலத்திலும் ஒரே மதத்திலும் ஒருவன் இன்னொருவனைப் பகைக்கிறான். இது தமிழ்நாட்டில் அயலார் ஆதிக்கம் கொள்வதற்கே ஏதுவாயிருக்கிறது.

பண்டைக்காலத்திலேயே திருவள்ளுவர் மீது பொறாமை கொண்டு. அவரது திருக்குறளை முதலாவது போற்றாது இருந்திருக்கின்றனர் புலவர்.

**இக்காலத்தில், அரசியற் கட்சியிலும் பொறாமைப் பேய் புகுந்து அலைக்கழிக்கின்றது. ஒரு தமிழன் தன் இனத்தானைப் பகைத்தானானால், அப்பகையைக் காட்டுவதற்கு உடனே தமிழர்க்குக் கேடு செய்யும் ஓர் அரசியற் கட்சியில் சேர்ந்துகொண்டு யானை கொழுத்துத் தன் தலையில் தானே மண்ணை வாரிப் போட்டுக்கொண்டது போலத் தன் குலத்தை அல்லது நாட்டைத் தானே கெடுத்துக்கொள்ளுகிறான்.**

இனி, தமக்கு ஒரு வேலையோ அமைச்சர் பதவியோ கிடைக்கவில்லையென்று, தன்னலமே பற்றி எதிர்க்கட்சியில் சேர்ந்துகொண்டு சமூகத்தைக் காட்டிக்கொடுத்த நீதிக்கட்சித் தமிழரும் உளர்.

தமிழர்க்கு முற்காலத்தில் மேனாட்டாருக்குத் தெரியாத எத்தனையோ அரிய கலைகள் தெரிந்திருந்தன. அவற்றையெல்லாம் விளக்கைக் கொளுத்தி மரக்காலால் கவிழ்த்து வைப்பது போலப் பிறர்க்குச் சொல்லாமல் மறைத்து மறைத்து வைத்து, அவை அவருடன் அழிந்தன. மந்திரம், மருத்துவம், சித்து. மல்லம், பொன்னாக்கம் (இரசவாதம்), யோகம் முதலிய பல

கலைகளிலும் நூல்களிலும் பல அரிய மறைபொருள்கள் (இரகசியங்கள்) இருந்து அறிவிக்கப்படாமலே மறைந்து போயின. இக்காலத்தில் நாயை மந்திரத்தால் வாயைக் கட்டுவது போலவே, முற்காலத்தில் அரிமா (சிங்கம்) புலி முதலிய கொடிய விலங்குகளையும் வாயைக் கட்டினர். இதையே, "கரடி வெம்புலி வாயையுங் கட்டலாம்" என்று குறித்தார் தாயுமான அடிகள்.

இக்காலத்தில் அறுப்புமுறையாற் குணமாக்கக் கூடிய பல கட்டிகளையும் நோய்களையும் முற்காலத்தில் மருந்தினாலேயே குணமாக்கினர். முற்கால மருத்துவர் நாடி பார்த்து மட்டுமன்று, நோயாளியின் முகத்தைப் பார்த்தவளவிலும், நோயையும் நோய் நிலையையுங் கூறத்தக்கவராயிருந்தனர். நல்ல பாம்பின் நஞ்சைப் போக்கும் மை இன்றுமுள்ளது. சித்தர் தாழ்ந்த உலோகங்களை எல்லாம் மாற்றுயர்ந்த பொன்னாக மாற்றக்கூடியவராயும், தம் உடம்பை எஃகினும் உறுதியாக இறுக்கிக்கொள்ளக் கூடியவராயும், யோகியரைப் போன்றே பன்னூறாண்டுகள் உடலோடிருக்கக் கூடியவராயும், கூடுவிட்டுக் கூடு பாய்தல், வான்வழிச் செல்லல், மறைந்தியங்கல், நிலத்தூடு காண்டல், நீர்மேல் நடத்தல், நெருப்பிலிருத்தல், மூச்சையடக்கல் முதலிய அரிய சித்திகளை அடைந்தவராயுமிருந்தனர்.

ஆயுதமில்லாமலே, ஒருவனைப் பிடித்து நிறுத்தவோ கொல்லவோ ஏதுவான, சில மருமப்பிடிகளும் தட்டுகளும் தெரிந்த சிலர் இன்றுமுளர் என்று சொல்லப்படுகின்றது.

படிமைக்கலை ***(Sculpture)***யில், எந்தக் கல்லையும் மெழுகு போல் இளக்கக்கூடிய ஒரு முறை, முற்காலத்தார்க்குத் தெரிந்திருந்ததாக, அக்கலையறிஞர் சிலர் கூறுகின்றனர். தமிழ்நாட்டினின்றே படிமைக்கலை, கிரேக்க, ரோம நாடுகளுக்குச் சென்றிருக்கின்றது.

இராவணன் தலை வெட்டவெட்டத் தளிர்த்தது என்பதிலும், சூரபதுமன் வேண்டியபடியெல்லாம் தன் உருவை மாற்றினான் என்பதிலும், குபேரனின் புட்பக வானூர்தியிலும், சச்சந்தனின் மயில் வானூர்தியிலும், ஒவ்வோர் உண்மையுள்ளதாக ஊகிக்கப்படுகின்றது. இவையெல்லாம் மறைத்து வைக்கப்பட்டு

மறைந்துபோயின. இக்காலத்திலும், கம்மியர் சில நுட்பவேலைப் பாடுகளையும், மருத்துவர் சில மருந்துகளையும், பிறர் பிறவற்றையும், தம் சொந்த மாணவர்க்கும் மக்களுக்குங்கூட மறைத்துவைக்கின்றனர்.

ஒரு மருத்துவர் தாம் இறக்கும்போதுதான், தமது மருத்துவ நுட்பங்களைத் தம் மாணவர்க்குச் சொல்லுவது வழக்கம். அதுவும் ஒன்றிரண்டு குறைத்தே சொல்லுவர். இங்ஙனம் ஒவ்வொரு குரு மாணவத் தலைமுறையிலும் சிறிது சிறிதாய்க் குறைந்துகொண்டே போனால் "கழுதை தேய்ந்து கட்டெறும் பாகி, கட்டெறும்பு சிற்றெறும்பாகி, சிற்றெறும்பு ஒன்றுமில்லாமற் போனதுபோல்" தான் ஒவ்வோர் அரிய கலையும் இங்ஙனமே குறைந்தும் மறைந்தும் போயிருக்கின்றது.

**சிலர் தாம் புதைத்து வைத்த பணத்தைத் தம் மனைவி மக்கட்குக்கூடச் சொல்லாது இறந்துவிடுகின்றனர். இவ்வகைப் பொறாமையுள்ளவரையில் தமிழர் உருப்பட வழியில்லை. ஒரு கலையை அல்லது தொழிலை வெளிப்படுத்தினால் தான் அதை மேலும் மேலும் திருத்தவும் வளர்க்கவும் முடியும்; அதனால் ஒரு நாடும் உலகமும் முன்னேறும்.**

கடவுள் உலகுக்கெல்லாம் தந்தை. உலகமுழுமைக்கும் பயன்படுவதற்கென்றே, அவர் ஒரு குலத்தானுக்கோ ஒரு நாட்டானுக்கோ அறிவை அளிக்கின்றார். அவன் அவ்வறிவைத் தனக்குள் மறைத்து வைப்பானாயின், அது அழிவதுடன் அரசியற் பணத்தை அல்லது பொதுவுடைமையைக் கவர்ந்த சேவகனின் குற்றமும் அவனைச் சாரும்.

## 4. குறிபார்த்தல்

பண்டைக்காலத்தில் உலக முழுவதும் குறிபார்த்தல் பெருவழக்காயிருந்திருக்கின்றது. மேனாட்டார் நாகரிகமடைந்த பின் அவ்வழகத்தை விட்டுவிட்டனர். தமிழரோ இன்னும் அதில் பெரும் நம்பிக்கை வைத்திருக்கின்றனர்.

வானக்குறி உலகக்குறி என குறி இருவகைப்படும். இவற்றை முறையே காலக்குறி, பொருட்குறி என்றுங் கூறலாம். வானக்குறி

ஜோசியம் என்றும். உலகக்குறி சகுனம் என்றும் வழங்குகின்றன. நாள் (நட்சத்திரம்), கிழமை முதலியன வானக்குறியாம். பூனை குறுக்கிடல், வாணியன் எதிர்ப்படல் முதலியன உலகக்குறியாம். இவ்விருவகைக் குறிகளையும் பார்ப்பதால் நன்மையுமில்லை; பாராததாற் கேடுமில்லை. மேனாட்டார் இவற்றைப் பாராததினால் விதப்பாக ஒரு தீங்கும், கீழ்நாட்டார் பார்ப்பதினால் சிறப்பாக ஒரு நலமும் அடைவதில்லை.

**குறி பார்ப்பதால் பல தீமைகள்தாம் உண்டாகின்றன. அவை வீண் செலவு, காலக்கேடு, மனக்கவலை, முயற்சியழிவு முதலியன. இதனால்தான், "சாத்திரம் பார்க்காத வீடு சமுத்திரம்" என்னும் பழமொழி எழுந்தது.**

கலியாணம் செய்யுமுன், பெண் மாப்பிள்ளைக்குப் பொருத்தம் பார்ப்பதால், சண்டை சச்சரவோ பிணி மூப்புச் சாக்காடோ வராமலிருக்கப் போவதில்லை. இருபத்தைந்தாம் ஆண்டில் இறக்கும் விதியுள்ளவனுக்கு. இருபதாம் ஆண்டில் பொருத்தம் பார்த்து மணஞ்செய்துவிட்டால், அவனுக்குச் சாவு வராதிருக்குமா? மேனாட்டார் பொருத்தம் பாராமல் மணப்பதால், கேடடையாமலிருப்பதோடு நம்மினுஞ் சிறப்பாய் வாழ்கின்றனர். பொருத்தம் பார்ப்பதால் சில சமையங்களில் உண்மையான பொருத்தங்களே தப்பிப்போவதுமுண்டு. **பெண்ணுக்கும் மாப்பிள்ளைக்குமுள்ள மனப்பொருத்தமே உண்மையான மணப்பொருத்தமாகும்.**

நாட்பார்க்கிறவர்கள் எல்லாக் காரியங்களுக்கும் பார்ப்பதுமில்லை, பார்க்கவும் முடியாது. ஒருவன் நோய்ப்பட்டிருக்கும் போதாவது, வீடுபற்றி வேகும் போதாவது, நாளும் வேளையும் பார்த்து மருந்துண்ணவாவது நெருப்பணைக்கவாவது முடியுமா?

''நாளும் கிழமையும் நலிந்தோர்க் கில்லை'' என்றார் ஔவையார். மேலும் புகைவண்டியிற் பயணஞ் செய்வோர் இராகுகாலம், குளிகைகாலம் பார்க்க முடியுமா? முடியாதே!

வடார்க்காட்டைச் சேர்ந்த ஆம்பூரில், பல ஆண்டுகளுக்கு முன் ஒருவர் 40ஆம் அகவை (வயது)யில் சிலநாள்,

நோய்ப்பட்டிருந்து இறந்துபோனார். அவருடைய பிறப்பியலில் (சாதகத்தில்) 60 அகவையென்று குறித்திருந்ததால். சரியாய் மருத்துவம் பார்க்கவில்லை என்று அவர் இறந்தபின், பிறப்பியற் குறிப்பை எடுத்துக் கூறி அவருடைய வீட்டார் வருந்தினர். ஒருவனுக்குச் சாவு வரும் நாளும் வேளையும் இறைவன் தவிர வேறு ஒருவரும் அறியார். **பிறப்பியல் கணிக்கிற கணியர்க்குத் தமது இறப்பு நாளே தெரியாதிருக்க, பிறர் இறப்பு நாள் எங்ஙனம் தெரியும்?** ஒவ்வொருவர்க்கும் இறப்பு நாள் முன்னமே தெரிந்திருந்தால் அதற்குள் எத்தனையோ காரியங்கள் செய்துகொள்ளலாமே!

சிலர் பிறப்பியற் கணிப்பு உண்மையானதென்றும், அதைக் கணிக்கிறவர் சரியாய்க் கணியாமையாலேயே தவறு நேர்கிறதென்றும் சொல்கின்றனர். அப்படியானால் உண்மையாய்க் கணிக்கிறவர் யார்? எந்தத் திறவோரை (நிபுணரை)க் கேட்டாலும், தமது கணிப்பு ஐந்துக்கிரண்டு பழுதில்லாமல் இருக்குமென்றே கூறுகின்றனர். இனி, அந்த ஐந்துக்கிரண்டுதான் எவையென்று திட்டமாய்த் தெரியுமா? அதுவுமில்லை. அங்ஙனமாயின், பிறப்பியலால் என்னதான் பயன்? உண்மையாய்க் கணிப்பவர் இனிமேல் தோன்றுவாராயின் அப்போது பார்த்துக்கொள்ளலாம். அதுவரை பிறப்பியலில் நம்பிக்கை வையாதிருப்போம்.

பிறப்பியலானது, ஒருவன் பிறந்த வேளையில் நாளும் (நட்சத்திரமும்) கோளும் (கிரகமும்) நிற்கும் நிலையை அடிப்படையாக வைத்துக் கணிக்கப்படுவது. ஒவ்வொருவன் பிறப்பையும் நாட்கோள் நிலை தாக்கும் என்று கொள்வது பொருந்தாது. அரசர் காரியத்தில் அது உண்மையாயிருக்கலாம். ஒரு புகைவண்டி புறப்பட்டபின் பொதுமக்களுக்கு நிறுத்தப்படாவிடினும், ஒரு பெரிய அதிகாரிக்கு நிறுத்தப்படுகின்றது. அதுபோலக் கடவுளாட்சியில், ஓர் அரசின் காரியத்தில் அல்லது ஒரு நாட்டுக் காரியத்தில், நாட்கோள்நிலை மாறலாம். முதன்முதலிற் கணித்தவர்கள் அரசர்க்கே பிறப்பியல் கணித்து, பிற்காலக் கணியர் பிழைப்புக் குன்றியபோது முறையே சிற்றரசர்க்கும், கிழார் (ஜமீன்தார்)கட்கும். செல்வர்க்கும்

அவருடைய இனத்தார்க்குமாகக் கடைசியிற் பொதுமக்களிடம் வந்திருக்கலாம். எப்படியிருப்பினும் **பிறப்பியற் கணிப்பாற் பொதுமக்களுக்கு ஒரு நன்மையுமில்லையென்பதே முடிபாம்.**

ஒருவர் ஒரு காரியம் ஆகுமா ஆகாதா என்று கேட்டால் கணியர்கள் பொதுவாய் வேகடையாகவும் இரட்டுறலாகவும் வலக்கார (தந்திர)மாகவுமே கூறுவர். சில சமையங்களில் அவர் கூறியது வாய்ப்பின், அது குருட்டடியேயாகும். தாம் கூறப்போகிற செய்தியைப்பற்றி முன்னமே பிறரிடம் மறைவாகக் கேட்டறிந்து கொள்வதும் அவர் வழக்கம். சிலர் சில இளந்த மனக்காரரை, அவருக்கு இத்தனை நாளிற் சாவென்று அச்சுறுத்தி, அதைத் தீர்த்தற்கென்று ஏமாற்றிப் பணம் பறிப்பதுமுண்டு.

நாட்பார்ப்பது போன்றே வேளைபார்ப்பதும் தீயதாகும். சில ஆண்டுகளுக்கு முன், சென்னையில் ஓர் இளைஞனுக்கு ஒரு பெரியார் ஓர் ஆங்கிலக் கும்பனியில் வேலைக்கு மதித்துரை (சிபார்சு) செய்திருந்தார். கும்பனித் தலைவர் அவ்விளைஞனை அடுத்த திங்கட்கிழமை காலை 8 மணிக்கு வந்து தம்மைப் பார்க்கச் சொல்லியிருந்தார். அவ்விளைஞன் வேளைபார்ப்பவனாதலால், காலை 7.30-லிருந்து 9 மணிவரை இராகுகாலமென்று அவ்வேளை கழித்து 9.30 மணிக்குச் சென்றான். உடனே கும்பனித்தலைவர் அவனுக்கு ஒழுங்கீனமான பயலென்று பட்டந்தந்து, கண்டபடி திட்டி வெளியே போகச் சொல்லிவிட்டார்.

ஆகையால் ஒரு காரியஞ் செய்வதற்குக் காலம்பற்றிக் கவனிக்கக் கூடியவையெல்லாம், தட்பவெப்பநிலை (சீதோஷ்ணஸ்திதி)யும் செல்வ வறுமை நிலையும் தூக்க ஊக்க வேளையும் ஒளியிருட் காலமுமேயன்றி வேறன்று.

இனி, பொருட்குறிகளைக் கவனிப்போம். ஒருவன் தன் வீட்டை விட்டுப் புறப்படும்போது, வாசல் நிலை தலையில் தட்டிவிட்டால், உடனே தடையென்று நின்றுவிடுகிறான். இதற்குக் காரணமென்னவென்றால், வாசல் குட்டையாயிருப்பதே. குட்டையான வாசலில் குனிந்து போனால் தட்டாது. சில சமையங்களில் குனிந்துபோக மறந்துவிடுவதால் தட்டிவிடுகிறது. இது மனிதனால் நேரும் குற்றமேயன்றி வாசலால் வந்த குற்றமன்று.

தானே வாசலை முட்டிவிட்டு வாசல் தட்டிவிட்டது என்று கூறுகிறவன் முட்டாள். முட்டுகிற ஆள் முட்டாள்தானே! வாசலை நெடிதாக்க வேண்டும், அல்லது குனிந்து போக வேண்டும். நெடிய வாசலானால் நிமிர்ந்து போகலாம். மேனாட்டார். நெடிய வாசல்கள் அமைப்பதால் முட்டாள்களாவதில்லை. வாசல் தட்டுவது தீக்குறியானால், நெடிய வாசலுள்ளவர்க்கெல்லாம் அக்குறி தோன்றுவதில்லையே! இதனால், முட்டாள் குட்டை வாசலை வைத்து முட்டாளாகிறான் என்று வெட்ட வெளியாகவில்லையா?

இங்ஙனமே பிற குறிகளும், பூனை, வாணியன், மொட்டைப் பார்ப்பாத்தி முதலியவர்கள் எல்லா இடங்களிலுமில்லையே! அவர்கள் இல்லாவிடங்களில் அவர்களால் நேரும் தீக்குறிகள் எங்ஙனம் தோன்றும்? ஆகையால் இவையெல்லாம் மனப்பான்மையால் தோன்றுவனவேயன்றித் தாமாகத் தோன்றுவனவல்ல.

மேலும், ஒருவனுக்கு ஒரு மொட்டைப் பார்ப்பாத்தி எதிர்ப்பட்டால், அவள்மட்டும் அவனுக்கு எதிர்ப்பட்டாள் என்று ஏன் கொள்ளவேண்டும்? அவளுக்கு அவன் அல்லது அவனும் எதிர்ப்பட்டான் என்று ஏன் கொள்ளக்கூடாது?

ஓர் ஊரில் ஓர் அரசனிருந்தான். அவன் ஒரு நாட்காலை ஒரு திட்டிவாசல் வழியாய் வெளியே தெருவை எட்டிப் பார்த்தான். அவ்வாசல் குட்டையாயிருந்ததால், அவன் தலையைத்தட்டி ஒரு காயமும் ஏற்பட்டது. வெளியே ஒரு இரவல (பிச்சைக்கார)ப் பையன் நின்றுகொண்டிருந்தான். அவனைப் பார்த்ததனால்தான் அக்காயம் ஏற்பட்டதென்று, அவ்வரசன் அவனைத் தூக்கிலிடச் சொன்னான். அப்போது அப்பையன், "ஆண்டவனே! தாங்கள் என்னைப் பார்த்ததனால் எனது உயிருக்கே இறுதி வந்துவிட்டதே! இதற்கு தாங்கள் என்ன செய்யப்போகிறீர்கள்?" என்று கேட்டான். உடனே அரசனுக்கு அறிவு பிறந்து. அவனை விடுதலை செய்துவிட்டான்.

குறியில் அல்லது கணியத்தில் (ஜோசியத்தில்) நம்பிக்கையுள்ள ஒருவன், ஒரு குறி ஒரு காரியத்திற்குத் தடையென்று நினைத்தால், அக்காரியத்தைச் செய்யாதே விட்டுவிடுகிறான்.

"தெய்வத்தா லாகா தெனினும் முயற்சிதன்
மெய்வருந்தக் கூலி தரும்" (குறள்)

என்றார் தெய்வப் புலவர்.

ஒரு காரியம் ஆகும் ஆகாதென்று முடிவில்தான் சொல்லமுடியும். சில காரியம் ஒரே முயற்சியில் முடியும். சில காரியம் பல முயற்சியில் முடியும். ராபட் புருஸ் ஆறுமுறை தோற்று ஏழாம் முறை வெற்றி பெற்றார்.

ஒரு காரியம் பல முறை முயன்றும் முடியாமற் போனாலும், பட்ட பாட்டிற்குப் பலனில்லாமற் போகாது. குறியில் நம்பிக்கையுள்ள ஒருவன், ஒரு குறியைக் கண்டபின் முயன்றும் ஒரு காரியம் முடியாமற்போனால், அதற்கு அவனது மனத்தளர்ச்சி காரணமாயிருக்கும் அல்லது முயற்சி போதாதிருக்கும். அல்லது குறியல்லாத வேறு காரணங்களிருந்திருக்கும். இவ்வுண்மைகளை அறியாமல் ஒரு குறியே காரணமென்று கொள்வது அறியாமையாகும்.

சில சமையங்களில் கலை(***Science***)யியற்படியோ தெய்வ ஏற்பாட்டாலோ, சில தீக்குறிகள் தோன்றிப் பின்னால் நேரப் போகும் துன்பங்களைக் குறிக்கலாம். அது வேறு செய்தி. இங்குக் கண்டிக்கப்படுவதெல்லாம் முயற்சியழிவிற்குக் காரணமான குறிபார்ப்பே. உண்மையில் நேரப்போகும் துன்பங்களைக் குறிக்கும் குறிகளைக் காணின், இயன்றவரை அத்துன்பங்களை விலக்க முயற்சி செய்ய வேண்டும்; முயன்றும் முடியாதாயின் தெய்வ ஏற்பாடென்று தெரிதல் வேண்டும்.

## 5. துறவியைப் பின்பற்றல்

மக்கள் வாழ்க்கைமுறை இல்லறம், துறவறம் என இருவகைப்படும். கடவுள் மக்களை ஆணும் பெண்ணுமாகப் படைத்திருப்பதாலும், உலகம் நடந்துவருதலே இறைவனுடைய முத்தொழில்களில் ஒன்றாகிய காப்புத் தொழிலாதலாலும், துறவியை நெடுங்காலம் தாங்குபவன் இல்லறத்தானாதலாலும், உண்மையான துறவு மிக அரிதாதலாலும், இல்லறத்திலும் வீடுபேறு கிட்டுமாதலாலும், துறவறத்தினும் இல்லறம் சிறந்ததெனக் கூறலாம்.

"இல்லற மல்லது நல்லறமன்று"

என்றார் ஔவையார்.

"அறனெனப் பட்டதே இல்வாழ்க்கை"

என்றார் திருவள்ளுவர்,

இல்லறம் துறவறம் ஆகிய இரண்டிற்கும் தனித்தனிச் சில சிறப்பியல்கள் உண்டு. அவற்றில் அவை ஒன்றையொன்று பின்பற்றுதல் தவறாம். உண்மைத் துறவிகள் பெரும்பாலும் கற்றோராயும் ஆசிரியராயிருந்தமையால், இல்லறத்தார் அவரை அளவிறந்து பின்பற்றித் தாமுங்கெட்டுப் பிறரும் கெடுவதற்குக் காரணமாய் இருந்திருக்கின்றனர். சில துறவிகளும், சிறப்பாகப் பௌத்த சமணத் துறவிகள். உலகிலுள்ள பலவகை நிலையாமைகளையும் துன்பங்களையும் மிகுத்துக்கூறி, இல்லறத்தார்க்கு உலக வாழ்க்கையில் மிகுந்த வெறுப்பையூட்டி இருக்கின்றனர். இதுவே கலைவளர்ச்சிக்குப் பெரிதும் தடையாயுள்ளது.

உலகவாழ்க்கை நிலையாததாயிருந்தாலும். இன்றைக்கும் நீண்ட வாழ்வினர் பெரும்பாலும் அறுபதாண்டுகளிருக்கக் காண்கின்றோம். ஒருவன் முப்பதாண்டுகளிருந்தாலுங்கூட அதற்குள் எத்துணையோ இன்பங்களையும் நுகர அனுபவிக்கலாம்; காரியங்களையுஞ் செய்யலாம். பரிதிமாற்கலைஞன் என்னும் சூரியநாராயண சாத்திரியார் 35-ஆம் ஆண்டில் இறந்து போயினார். ஆயினும் அதற்குள் 80 ஆட்டைப் பருவத்தினரும் செய்திராத பல முயற்சிகளையும் தொண்டுகளையும் செய்திருக்கின்றனர்.

"இன்றைக்கிருந்தாரை நாளைக்கிருப்பரென் றெண்ணவோ திடமில்லை" அது போன்றே இன்றைக்கிருந்தாரை நாளைக்கிரார் என்று எண்ணவும் திடமில்லை.

ஓர் இடத்தில் ஒருவன் இரண்டொரு நாளே குடியிருப்பதாக இருந்தால், அதைச் செவ்வைப்படுத்தமாட்டான். நீடித்திருந்தால் நிலையானதென்று அதைச் சீர்ப்படுத்துவான். அதுபோன்றே உலகம் நிலையில்லதென்று கருதி இடைக் காலத் தமிழர்

இம்மைக்குரிய கலைகளிற் கவனஞ்செலுத்தாது, மறுமைக்குரிய மதவாராய்ச்சியிலேயே ஈடுபட்டிருந்திருக்கின்றனர். மேனாட்டினரோ, அங்ஙனமன்றி உலகத்திலுள்ளவரை சிறப்பாய் வாழலாமென்று, இம்மைக்குரிய கலைகளை எல்லாம் ஆழ ஆராய்ந்து உலக நலமான பல புதுப்புனைவுகளை *(Inventions)* இயற்றியிருக்கின்றனர். தமிழர் புதிதாகக் கலையாராய்ச்சி செய்யாமலிருந்ததோடு, தம்முன்னோர், பன்னூறாண்டுகளாகப் பயின்றமைத்து வைத்த இசை நாடகம் ஓவியம் முதலிய கலைகளையும் சிற்றின்பத்திற்கு ஏதுவானவை என்று பெரிதும் அழியவிட்டிருக்கின்றனர்.

உலகத்தில் இன்பமும் உண்டு. ஆயினும் துன்பத்தை மட்டும் கவனித்தனர் சில துறவிகள்.

"பிறந்தார் உறுவது பெருகிய துன்பம்" என்றனர் பௌத்தர். "வெறியயர் வெங்களத்து ...... மறிகுள குண்டன்ன மன்னா மகிழ்ச்சி" என்றனர் சமணர். இங்ஙனமே பிற மதத் துறவிகள் சிலரும் கூறினர். பேரின்பம் போன்றே சிற்றின்பமும் கடவுளால் அளிக்கப்பட்டதே. சிற்றின்பம் நுகர்ந்தவரே பேரின்பத்தையும் நன்றாய் உணரமுடியும். அதனால் அவர்க்கு அதன்மேல் விருப்பமுண்டாகவும் இடமுண்டு. இக்கருத்துப் பற்றியே திருச்சிற்றம்பலக் கோவை பாடினார் மாணிக்கவாசக அடிகள். "அறவழியில் சிற்றின்பத்தை நுகர்ந்தால் யாதொரு குற்றமுமில்லை மேன்மக்களானும் புகழப்பட்டு மறுமைக்கும் உறுதி பயக்குமாதலின் இக்காமம் பெரிதும் உறுதியுடைத்து" என்றார் நக்கீரர்.

சில துறவிகள் செல்வமும் பெண்டிரும் சிற்றின்பத்திற் கேதுவென்று அவரை வரம்பு கடந்தும் பழித்தனர். சிலர் மனித உடம்பையும் மிகமிக இழிவாகக் கூறினர். இவரது கூற்றின்படி நடந்தால் அது ஒருவகைத் தற்கொலையேயாகும். **செல்வத்தைப் பழித்ததே தமிழரின் சோம்பலுக்கும் காலந்தவறுந் தன்மைக்கும் காரணமாகும்.**

கடவுள் தம் முற்றறிவால் எல்லாப் பொருள்களையும் மனிதன் தன் நன்மைக்கென்று படைத்திருக்கப் பன்னாடை போல

அவற்றின் நற்கூறுகளையுணராது தீக்கூறுகளையே தவறாக உணர்வது கடவுளின் படைப்பிற்கே குற்றங்கூறியதாகும்.

பொருளில்லாவிட்டால் ஒருவன் உயிர்வாழ முடியாது. பெண்டிர் இல்லாவிட்டால் இல்லறம் நடவாது. மக்கள் குலம் அழியும்; உடம்பைப் பேணாவிட்டால் நோய்ப்பட்டு ஒரு வினையுஞ் செய்யமுடியாது, பிறர்க்குப் பாரமாயிருக்க நேரும். அதோடு வீடுபேற்று முயற்சியும் கெடும். பின்பு சாவும் வரும்.

உடம்பின் பயனை நன்றாயறிந்தே,

**"உடம்பார் அழியில் உயிரார் அழிவர்**
**திடம்பட மெய்ஞ்ஞானஞ் சேரவு மாட்டார்**
**உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்தே**
**உடம்பை வளர்த்தேன் உயிர்வளர்த் தேனே"**
**"உடம்பினை முன்னம் இழுக்கென் றிருந்தேன்**
**உடம்பினுக் குள்ளே உறுபொருள் கண்டேன்**
**உடம்புளே உத்தமன் கோயில் கொண் டானென்**
**றுடம்பினை யான்இருந் தோம்புகின் றேனே"**

என்றார் திருமூல நாயனார்.

உடம்பைப் பேணாமையால், நலவழி (சுகாதாரம்) மருத்துவம், சமையல் முதலிய கலைகள் வளர்தற்கிடமில்லை.

பல துறவிகள் கோவணந் தவிர வேறொன்றும் அணியாமையாலும், இல்லறத்தார் பலர் அவரை மதித்ததனால் தம் உடம்பை வேட்டியால் போர்த்தல் அன்றிச் சட்டையணியாமையாலும், நெசவு, தையல் முதலிய கலைகளும் சிறிது கெட்டன.

சட்டையணிதல் பண்டைக்காலத்து மிருந்தது. அதை விரும்புவோர் கோடைக்காலத்தில் இல்லாவிட்டாலும் குளிர்காலத்திலாவது அணிந்திருக்கலாம்..

துறவிகள் அருள் காரணமாகவும் உடம்பை ஒடுக்குதற்கும் ஊனுணவை யொழித்து மரக்கறியே உண்டுவந்ததால், இல்லறத்தாரும் அவரைப் பின்பற்றி ஊனுணவை

ஒழித்திருக்கின்றனர். இவரே சைவ வேளாளர் எனப்படுவார். இவரைப் பின்பற்றி வேறு சில குலத்தாரும் அண்மையில் ஊனுணவை விலக்கியிருக்கின்றனர். இதை யாம் குற்றமாகக் கூறவில்லை. ஆனால், மரக்கறியுணவே தூயதென்றும், ஊனுணவு தூயதன்றென்றும் கூறுவதை யாம் ஒப்புக்கொள்ள முடியாது.

ஊனுணவு கொலையுள்ள தென்றால், மரக்கறியுணவும் கொலையுள்ளதே.

சில அஃறிணை உயிரி (பிராணி)களுக்கு ஊனே உணவாக இருக்கின்றது. ஊனுணவு குற்றமுள்ளதாயின், அக்குற்றம் கடவுளையே சாரும். "புலி பசித்தாலும் புல்லைத் தின்னுமா?" குளிர்நாடுகளில் ஊனுணவு தவிர வேறொன்றும் கிடைப்பதில்லை. குறிஞ்சிநாடுகளில் மக்கட்கு விலங்குணவு இயற்கையாக இருக்கின்றது. கண்ணப்ப நாயனார் பன்றியூனைத் தாமும் தின்று சிவ பெருமானுக்கும் கொடுத்தார்.

துறவறத்திற்குரிய அருள் இல்லறத்தார்க்கிருக்க முடியாது. அதனாலேயே, அருளுடைமை, புலான்மறுத்தல், கொல்லாமை என்ற மூன்றதிகாரங்களையும் துறவறத்தில் வைத்துக் கூறினார் திருவள்ளுவர்.

ஊனுணவால் வீரத் தன்மையும் மரக்கறியுணவால் சாந்தத் தன்மையும் உண்டாகும். அரிமா சிறியதாயும் யானை பெரியதாயு மிருந்தாலும், முன்னது பின்னதை எளிதிற் கொன்றுவிடுகின்றது. இதற்கு அவற்றின் ஊனுணவும் மரக்கறியுணவுமே காரணம்: உலகத்தில் ஊனுண்ணாத வீரக்குலத்தார் எங்குமில்லை. இதனாலேயே ஊனுண்டிச்சாலை ஆங்கிலத்தில் மிலிட்டரி ஹோட்டல் எனப்படுகின்றது. வீரம் ஒரு நாட்டுக்காப்பிற்கு இன்றியமையாதது. பண்டைத் தமிழரசரும் பொருநரும் ***(Soldiers)*** சிறக்க ஊனுண்டனர். திருவள்ளுவர் அரசியலாராய்ந்தவராதலின், இவ்வுண்மைகளை அறிந்திருந்தார்,

சில உயிரிகள் ஊன்கள் சில கொடிய நோய்கட்குச் சிறந்த மருந்தாயுள்ளன.

கல்விக்குரிய உயர்ந்த வகுப்பார் ஊனுணவை விலக்கியதால். உடல்நூல் ***(Physiology)***, அக்கறுப்பு நூல் ***(Anatomy)***, அறுப்பியம் ***(Surgery)*** முதலியன தோன்றற்கும் வளர்தற்கும் இல்லை.

ஊனுணவு பழிக்கப்படுவதால், உயர்ந்த குலத்தார் ஆடு கோழிப் பண்ணைகள் வைத்து நாட்டின் உணவு வசதியையும் பொருளாதாரத்தையும் பெருக்கவில்லை. தாழ்ந்த குலத்தார்க்கோ பொருளிட வசதியில்லாதிருப்பதுடன், ஊனும் பாலும் அவர் கைப்படின் விலையாதற் கிடமில்லாமலுமிருக்கின்றது. ஆத்திரேலியா, நார்வே முதலிய நாடுகளுக்கு ஆட்டுப்பண்ணையே உயிர் நாடி. தமிழரும் இதை மேற்கொள்ளின் மிகுந்த நலமுண்டாகும்.

## 6. ஆரியம்

**தமிழன் கெட்ட வழிகளில் மிகக் கொடியது ஆரியமே. ஆரியரைப் போலக் குலப்பற்றுள்ள வகுப்பார் வேறெவரும் இல்லையென்றே கூறலாம்; ஆரியர் தமிழ்நாட்டிற்கு வந்ததைப்பற்றியும், தமிழர் அவரை வளம் படுத்தியதைப் பற்றியும் யாம் ஒன்றும் சொல்வதற்கில்லை. ஆனால், ஆரியர் தம்மைத் தாங்கிய தமிழரையே கெடுக்கின்ற நன்றிக்கேடு பொறுக்குந் தரத்ததன்று.**

ஆரியத்தால் தமிழர்க்கு விளைந்த தீங்குகளை இருவழியாகப் பிரிக்கலாம்:

**(1) குலப்பிரிவினை**

மேனாட்டாரைப்போல ஒரே சமூகமாய் உறவாடிக் கொண்டிருந்த தமிழரைப் பற்பல உறவு கலவாத தனிக் குலங்களாகப் பகுத்து, அவற்றுக்கு உயர்வு தாழ்வும் பிறப்பாற் சிறப்பும் கற்பித்து, அவையெல்லாம் தமக்குத் தொண்டு செய்யும்படி தம்மைத் தலையாகச் செய்துகொண்டனர் ஆரியர். அவர் வருமுன் தமிழர்க்குள் இருந்த குலப்பகுப்பு ஒழுக்கமும் தொழிலும் பற்றியதேயன்றிப் பிறப்புப்பற்றிய தன்று.

“ஒழுக்க முடைமை குடிமை இழுக்கம்
இழிந்த பிறப்பாய் விடும்” (குறள். 133)

"பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யான்" (குறள். 972)

என்று தெய்வப்புலமைத் திருவள்ளுவ நாயனாரே, ஆரியர் வகுத்த குலப் பகுப்பைக் கண்டித்திருக்கின்றார்.

ஆட்சியதிகாரம் அக்காலத்தில் அரசரிடமிருந்தது; அதனால், ஆரியர் முதலாவது அரசரையே அடுத்தனர். இக்காலத்தில் குடிகளிடமிருப்பதால் இன்று அவர்களை அடுக்கின்றனர். அரசனிடம் அதிகாரமிருந்த அக்காலத்தில், ஆரியர் பல வலக்காரங்களால் அரசரை வசப்படுத்தினதனால், குடிகள் ஆரியத்தீங்கைத் தடுக்க முடியவில்லை. ஆயினும் ஆரிய அன்முறையை(அநியாயத்தை)ப் பொறாத சில புலவரும் துறவிகளும் ஆரியத்தைக் கண்டித்தே வந்தனர். சித்தரின் பார்ப்பனியக் கண்டனத்தைப் பதினெண்சித்தர் ஞானக்கோவையிற் பரக்கக் காண்க.

தமிழர் மதிநுட்பமுள்ளவரானாலும் பழைமையான குலத்தைச் சேர்ந்தவராதலாலும், பிறர்க்குத் தீங்கு கருதாதவராதலாலும், தம்மைப் போலப் பிறரை எண்ணி அயலாரையெல்லாம் நம்பி வேளாண்மை செய்யும் தன்மையராயிருந்தனர். ஆரியர் ஏற்பாடும் சிறிது சிறிதாய் நெடுங்காலம் நடைபெற்றதன்றித் திடுமென்று தோன்றியதன்று. மதத்தினால் எவரையும் நம்பும் சில மதப் பித்தரான தமிழரும் இருந்தனர். மேனாடுகளில் ஆரியரே, ஐந்தாம் பட்டாளத்தாரான ஆரியரால் இவ்விருபதாம் நூற்றாண்டில் ஏமாற்றப் பட்டிக்கும்போது, இருபது நூற்றாண்டுகட்கு முன் திராவிடர் ஆரியரால் ஏமாற்றப்பட்டது வியப்பாகுமா?

**குலப்பிரிவினையால் முதலாவது தமிழரின் வலிமை அழிந்தது. ஒரு பெரிய நாட்டைக் கெடுப்பதற்குப் பிரிவினை ஒரு சிறந்த வழி. குலப்பிரிவினை போன்றே மதப் பிரிவினை கட்சிப் பிரிவினைகளாலும் தமிழ்க்குலம் சிதைக்கப் பட்டுக் கிடக்கின்றது.**

குலப்பிரிவினையால் தமிழரின் வீரமும் அழிந்தது. ஒருவன் தன்னினும் மேற்குலத்தானாகக் கருதப்படுகிறவனைக் கண்டவுடன் தன்னைத் தாழ்ந்தவனாக நினைத்துக் கொள்கிறான்.

அவனுக்கு எப்படி வீரம் பிறக்கும்? தாழ்த்தப்பட்டோரோ தீண்டவும் அண்டவும் பெறாமையால், அவரது வீரம் அறவே அழிந்ததென்றுங் கூறலாம். தீண்டாதவன் ஒருவன் ஒரு பார்ப்பனரைக் காணின் அஞ்சி ஒடுங்குகிறான். அவன் நரம்பு தளர்ந்துவிடுகின்றது. தாழ்த்தப்பட்டோர்க்குத் தீண்டாமையால் வந்த தீமை கொஞ்சநஞ்சமன்று. உயர்குலத்தார் வாழும் அல்லது பயிலும் இடத்தில் குற்றேவலும் கூலிவேலையுங்கூட அவனுக்குக் கிடைப்பதில்லை. ஒரு நீதிமன்றத்தில் அல்லது அலுவலகத்தில் ***(Office)*** சேவகன் அல்லது வாயிற்காவலன் வேலை அவனுக்குக் கிடைப்பதும் பெறற்கரும் பேறாயிருக்கின்றது.

சில ஊர்களில், தாழ்த்தப்பட்டோர் அக்கிரகாரத் தெருவழியே செல்லவும், ஊர்க்குளங்களிற் குளிக்கவும். இன்னும் வியப்பாக, மேலாடையும் சட்டையும் அணியவும் விடப்படுவதில்லை. தாழ்த்தப்பட்டோரின் சிறாரைப் பிறகுலச் சிறார் பயிலும் பள்ளிக்கூடங்களிலும் சேர்ப்பதில்லை. இதனாற் கல்வியும் அவர்க்கில்லாது போயிற்று. இத்தீமைகளெல்லாம், விடையூழியரின் (மிஷனரிமாரின்) துணிவாலும், நீதிக் கட்சியினரின் முயற்சியினாலும் நீங்கி வருகின்றது. ஆயினும், இன்னும், தாழ்த்தப்பட்டோர் இந்துக்களாயிருந்த விடத்தும், அவர் சிறார் சில திண்ணைப் பள்ளிக்கூடங்களிலும், திருவாவடு துறை, தருமபுரம் முதலிய இடத்து மடத்துப் பள்ளிகளிலும் சேர்க்கப்படுவதில்லை.

பண்டைக்காலத்தில், பறையருள் ஒரு பிரிவினரான பாணர் இசைத் தொழிலராயிருந்து இசைத்தமிழை வளர்த்துவந்தனர். தீண்டாமையால் பிற்காலத்தில் அவர்க்கு உயர்குலத்தாரிடத்தில் இடங்கிடையாமற் போனதினாலும், பார்ப்பனர் இசைத்தொழிலிற் புகுந்தமையாலும், பாணர்க்குப் பிழைப்புக் கெட்டதுடன் இசைத்தமிழும் மறைந்து போயிற்று.

வள்ளுவர்க்குரிய கணிய (ஜோதிட)த் தொழிலையும் பார்ப்பனர் கைப்பற்றிக்கொண்டனர்.

மருத்துவம் பண்டைக்காலத்தில் பல அம்பட்டரால் செய்யப்பட்டு வந்தது. சத்திரவித்தை என்னும் அறுப்பு மருத்துவமும் அவர்களுக்குத் தெரிந்திருந்தது. மருத்துவத்தினாலேயே அம்பட்டர்க்குப் பண்டிதன், பரிகாரி என்ற பட்டங்கள் உண்டாயின. பரிகாரி என்பது இன்று பரியாரி என மருவி வழங்குகின்றது. இன்றும் பலவிடங்களில் அம்பட்டர் மருத்துவராயிருக்கின்றனர். ஆயினும், குலத்தாழ்வுபற்றி அவரை ஊக்காமையால் தமிழ் அறுப்பு மருத்துவம் அடியோடொழிந்தது.

தாழ்த்தப்பட்டோர்க்குத் தம் தெய்வத்தைக் கோயிலில் வணங்கும் உரிமையும் இல்லாது போயிற்று.

**முற்காலத்தில், தமிழ்நாட்டில் வேளாளனே தலைவனாகவும், பிறரெல்லாம் அவனுக்குத் துணைவராகவும் கருதப்பட்டனர். பிற்காலத்தில் பார்ப்பனன் தலைவனாகவும் பிறரெல்லாம் அவனுக்குத் தொண்டராகவும் கருதப்படலாயினர்.** பார்ப்பனர் தம்மைக் குலமுறையில் தலைமையாகச் செய்துகொண்டதால், எந்த வேலையிலும் தொழிலிலும் அவருக்கு முதலிடங் கிடைப்பதுடன், அவர் தாழ்ந்த வேலையைச் செய்தாலும் உயர்வை இழவாதிருக்கின்றனர். ஒரு பார்ப்பனர் தண்ணீர்க்காரனாயிருந்தால் அவரைச் சாமி சாமி என்கின்றனர்: வேறொரு குலத்தான் அவ்வேலையைச் செய்தால், அவனுக்கு மதிப்பில்லை. தோட்டி வேலை செய்தாலுங் கூடப் பார்ப்பனர் சாமி சாமி என்றே அழைக்கப்படுவர் போலும்!

சிலர், தாழ்த்தப்பட்டோர் துப்புரவு (சுத்தம்) இல்லாமலும் ஒழுக்கக் கேடாயுமிருப்பதால் அவரொடு எங்ஙனம் பழகமுடியும் என்கின்றனர். தாழ்த்தப் பட்டோர் பிறரால் தள்ளப்படுவதனாலேயே அங்ஙனமிருக்கின்றனர். வெள்ளைக்காரரின் சமையற்காரர் தாழ்த்தப்பட்டோரா யிருந்தும் துப்புரவாயும் ஒழுக்கமாயும் இருப்பதால், பார்ப்பனரும் அவர் சமைத்ததை உண்கின்றனர். ஒழுக்கக்கேடு பிற குலத்தார்க்குமுள்ளது.

தாழ்த்தப்பட்டோர்க்குக் கல்விமட்டும் அளிப்பின் மிகத் திருந்திவிடுவர். “பறையைப் பள்ளிக்கு வைத்தாலும் பேச்சில் ஐயே என்னும்'' என்றொரு பழமொழி வழங்குகின்றது. குறைந்தது

ஆயிரம் ஆண்டுகளாகத் தாழ்த்தப்பட்டுக் கிடப்பவரை ஓரிரு ஆண்டுகளில் முற்றிலும் திருத்திவிட முடியாது. சில தலைமுறைகளாகத் தொடர்ந்து நாகரிகம்பெறின், பின்பு தாழ்த்தப்பட்டோர்க்கும் பிறர்க்கும் எதிலும் வேறுபாடில்லாமற் போம் என்பது திண்ணம்.

**பார்ப்பனர் சமுதாயத்தில் தலைமைபெற்றதனால், தமிழர் அவரைப் பேச்சிலும் பழக்கத்திலும் பின்பற்றித் தமிழைக் கெடுத்துக்கொண்டதோடு, சில கலைகளுக்கும் இடமில்லாது செய்துவிட்டனர்.** உதாரணமாக, மட்கலக்கலை, பார்ப்பனரைப் போல உலோகப்பாண்டங்களைப் பழங்குவதே உயர்வென்றும், மட்பாண்டங்களைப் பழங்குவது இழிவென்றும் கருதப்பட்டதால், மட்கலக்கலை வளர்வதற் கிடமில்லாது போயிற்று.

'குலப்பிரிவால் குரங்கானாலும் குலத்திலே கொள்ள வேண்டும்' என்று, ஒரு குலத்திற்குள்ளேயே அல்லது குடும்பத்திற்குள்ளேயே மணஞ்செய்து கொள்வதால், மதிநுட்பம், உடலுரம், நெடுவாழ்வு முதலிய் குணங்களில்லாத பிள்ளைகள் பிறந்து நாடு சீர்கேடடைகின்றது.

கிறிஸ்தவர், மகமதியர் முதலிய பிற மதத்தாரை இக்கால இந்துக்கள் இழிவாயெண்ணுவதால், குலப்பிரிவினை மதத்தையும் தாக்கி, இந்துக் கோயில்களிலுள்ள கல்வெட்டுகளைப் பிற மதத்தார் கண்டாராய்வதற்கிடமில்லை.

சில ஊர்களில் வித்துவசபையென்றும் புலவர் கழகம் என்றும் அமைக்கப்பட்டு ஆண்டுதோறும் தமிழர் செல்வம் கொடை வழங்கப்படுகின்றது. அங்குக் கிறிஸ்துவ மகமதியப் புலவர்க்கு இடமில்லை. நோபெல் பரிசுபோலத் தேச குல மத வேறுபாடின்றிப் புலமைத் தகுதியறிந்து பரிசளிக்கப் பட்டாலொழியத் தமிழும் தமிழரும் முன்னேறுவதில்லை என்பது திண்ணம்.

பண்டைக்காலத்தில் தமிழ்நாட்டில் மதப் பொறுதி ***(Religious tolerance)*** இருந்தது. தமிழ்க்கழகங்களில் சைவர், மாலியர் (வைணவர்), பௌத்தர், சமணர், உலகாயதர் ஆகிய பல மதத்தினரும் இருந்தனர். தமிழரசர் பல மதக் கோயில்கட்கும்

அறநிலையங்கட்கும் மானியம் அளித்தனர்; பல மத ஆசிரியரையும் பட்டிமண்டபமேற்றித் தருக்கம் செய்வித்து உண்மைகண்டு வந்தனர். ஒரு குடும்பத்திற்குள்ளேயே, சேரன் செங்குட்டுவனும் இளங்கோவடிகளும் போல், பல மதத்தினர் இருக்க இடமிருந்தது.

**இவ்வகை மதப் பொறுதியுள்ள வரையில் தமிழ்நாடு அமைதியாகவும் சீராகவுமிருந்துவந்தது. பிற்காலத்தில், ஒரு தன்னலக் கூட்டத்தார். பிற மதங்களால் தமது தலைமை கெடுதல் நோக்கி குலமதப் போர்களைக் கிளப்பிவிட்டனர். தமிழ்நாடு அலைக்கழிக்கப்படுகின்றது. ஒவ்வொரு பொருளைப் பற்றியும் மனிதனுக்குக் கருத்து வேறுபாடுண்டு. மதமோ மிகுதியும் கருத்து வேறுபாட்டிற்கிடமானது. ஆகையால், கருத்துரிமையுள்ள நாட்டில் மதப் பொறுதியுமிருத்தல் வேண்டும்.**

**(2) கல்வியிழப்பு**

பார்ப்பனர் தம்மை ஞாலத்தேவர் (பூசுரர்) என்றும், வடமொழியைத் தேவமொழியென்றும் உயர்த்திக்கொண்டதால், தமிழர் அவரைப் பின்பற்றி வட சொற்களை வேண்டாது வழங்கப் பல தென்சொற்கள் அறவே மறைந்துபோயின. புதுக் கருத்துகட்கெல்லாம் தமிழில் புதிதாய்ச் சொற்கள் புனையாமல், வட மொழியிற் புதிதாய்ப் புனையப்பட்ட சொற்களையே வழங்கியதால், தமிழிற் சொல்வளர்ச்சியில்லாதும் போயிற்று.

கடவுள் வழிபாட்டையும் இல்லறச் சடங்குகளையும் வடமொழியில் நடத்துவித்ததால், தமிழின் மதிப்புக் குன்றிற்று. கல்வெட்டுகளைக் கூடப் பிற்காலத்தில் வழக்கற்ற வடமொழியில் பொறிக்கத் தொடங்கினர்.

தமிழர்க்கு உயர்தரக் கல்வியில்லாதும், தப்பித்தவறிக் கற்றவர்க்கும் பிழைப்பில்லாதும் போனதால், பல புலவர் வழிமுறைகள் அற்றுப்போயின. கடல் கோட்பட்டவைபோக, எஞ்சிய நூல்கள் பல செல்லுக்கிரையாகியும், அடுப்பில் இடப்பட்டும், பதினெட்டாம் பெருக்கில் எறியப்பட்டும், குப்பையிற் கொட்டப்பட்டும் அழிந்துபோயின. அதனாற் பல கலைகள் மறைந்தன. ஆயிரக்கணக்கான புலவரும் செய்யுள்

செய்யவல்ல குடிமக்களும் தொழிலாளரும் நிறைந்திருந்த தமிழ்நாடு, இன்று நூற்றுக்குத் தொண்ணூறு பேரைத் தற்குறிகளாகக் கொண்டுள்ளது.

**வடநாட்டிலிருந்து பார்ப்பனர் கூட்டங் கூட்டமாக வந்து தமிழ்நாட்டிற் குடியேறினர், குடியேற்றவும் பட்டனர். அவர் வரவரத் தமிழர்க்கு அலுவற்பேறு குறைந்துகொண்டே வந்தது. வடமொழிக் கல்வியை வளர்க்கவும் பார்ப்பனரையே முன்னேற்றவும் பல வழிதுறைகள் வகுக்கப்பட்டன.**

தமிழர்க்குத் தாய்மொழியுணர்ச்சியும் தாய்நாட்டுச் சரித்திர அறிவும் இல்லாது போயின. தமிழில் எத்தனை வடசொற்கள் கலக்கின்றனவோ அத்துணைச் சிறப்பு என்று எண்ணப்பட்டது. அதனால்தான் ஆங்கிலம் வந்தபின் ஆங்கிலச் சொற்களையும் கலந்து பேசுகின்றனர். தமிழர் தென்னாட்டிற்கே உரியவராய், ஆரியர் வருமுன்பே சிறந்த நாகரிகமடைந்தவராயிருப்பவும். வடநாட்டிலிருந்து வந்தவரென்றும் ஆரியரால் துரத்தப்பட்டவரென்றும் அவராலேயே நாகரிக மடைந்தவரென்றும் தவறாய்க் கருதப்பட்டனர்.

**தமிழுக்கும் தமிழர்க்கும் மாறான பல ஆரியக் கதைகள் தமிழ்நாட்டில் புகுத்தப்பட்டன. மதியை விளைக்காதனவும், அடிமைத்தனத்தில் ஆழ்த்து வனவும், கலையிலக்கியங்களில் பொய்யும் புனைந்துரையுமானவுமான பல தீமைகள் தமிழர்க்குப் புகட்டப்பட்டன. இன்றும் ஆங்கிலேயரினின்று விடுதலையாவதினும் ஆரியரினின்று விடுதலையடைவதே தமிழர்க்கு அரிதாகின்றது.**

## 7. அரசியற்கட்சிகள்

**1. நீதிக்கட்சி:** ஆரியர்க்கும் தமிழர்க்கும் மொழிப்போர் தொன்றுதொட்டு நடந்துவருகின்றதேனும், அது பொதுமக்களுக்குத் தெரிவதன்று. ஆரியரால் திராவிடர்க்கு நேர்ந்துள்ள சமுதாயத் தீங்குகளை, முக்கியமாய் அலுவற் குறைவை, நீக்குவதற்கு, நீதிக்கட்சி தோன்றினது. ஆனால், அக்கட்சியில் சில குறைபாடுகள் இருந்தன. அதனால், தமிழர்க்கு ஒரேயொரு துறையில்தான் நலம் பிறந்தது. அதுவும் நீடிக்கவில்லை.

நீதிக்கட்சித் தலைவர்கள் தெலுங்கரும், மலையாளியரும் தமிழறியாதவருமாக இருந்ததினால், தமிழ் வளர்ச்சிக்கோ தமிழ்ப் புலவர் முன்னேற்றத்திற்கோ ஒன்றும் செய்யவில்லை. அவருட் பலர் கிழார் (ஜமீன்தார்)களாக இருந்தமையால் குடியரசுக்கு ஏற்காதவர்களாயும் பொதுமக்களோடு தொடர்பில்லாதவர்களாக இருந்தார்கள். விடுதலைக்கட்சியே வெல்லும் என்பதையும், ஆங்கிலேய ஆட்சி இந்தியாவில் ஒரு காலத்தில் நீங்குமென்பதையும் அறியாமல், ஆங்கிலேயருடன் அளவிறந்து ஒத்துழைத்துப் பழியையும் கட்டிக்கொண்டார்கள். கடைசியில் தங்கள் கட்சி வேலையும் செய்யாமல், தேர்தலில் தோல்வியுற்றபின் இடம் தெரியாமல் ஓடி ஒளிந்துகொண்டார்கள். இது அவர்கள் செய்த தவறுகளில் மிகப் பெரிது.

அவர்களுள் ஓரிரு தலைவர்களாவது. மேற்கூறிய குறைகளைத் தாங்கள் திருத்திக்கொள்வதில்லை; தமிழறிஞரோடு தொடர்புகொள்வதுமில்லை. **முதலாளியும் தொழிலாளியும் கூடியிருந்தால்தான் தொழில் நடக்கும்; அதுபோல, தலைவரும் தமிழறிஞர்களுங் கூடினால்தான் தமிழ்நாடு முன்னேறும்.**

**2. காங்கிரசு:** வகுப்புவாரியாய், மக்கள்தொகைக்குத் தக்கபடி, அரசியல் வேலையளிக்கப்பட வேண்டுமென்ற நீதிக்கட்சி ஏற்பாட்டினால், தங்களுடைய தலைமை நீங்குவதையறிந்த பார்ப்பனர், தேசியப் போர்வையைப் போர்த்துக் கொண்டு விடாமுயற்சியாய் வேலை செய்ததனாலும், பல வலக்காரங்களைக் கையாண்டதனாலும், கடைசியில், ஆரிய அல்லது வடநாட்டுத் தலைமையுள்ள காங்கிரசுக்கு வெற்றி கிடைத்தது. ஆனால், காங்கிரசு தலைவரான பார்ப்பனர், ஆரிய வெறிகொண்டு நீதிக்கட்சி மேலுள்ள கோபத்தையெல்லாம் தமிழ் நாட்டின் மேல் காட்டி, அதை ஒரேயடியாய் ஆரிய மயமாக்க வேண்டுமென்று துணிந்ததனால், தக்க தலைவரின்றியும், வறுமைப்பட்டும், சிறுபான்மையராயும், பிழைப்புத் துறையிற் பெரும்பாலும் எதிரிகள் கையில் அகப்பட்டும் இருக்கின்ற ஒருசில தமிழர்க்கும். மானத்துடன் வாழ்வது அது தப்பின் மாள்வது என்ற உணர்ச்சி பிறந்துவிட்டது.

காங்கிரசு ஆரிய நாகரிகத்தை வளர்ப்பதனாலும், தமிழ் நாகரிகத்தைத் தளர்ப்பதனாலும், தமிழர்க்கு மாறானது. விடுதலை முயற்சி நல்லது. ஆனால், தனக்கு விடுதலை வராதது தமிழனுக்கு நல்லதன்று. "தாயும் பிள்ளையுமானாலும் வாயும் வயிறும் வேறு"

காங்கிரசாட்சியில், தமிழர்க்கு விளைந்த தீமைகளுள் முக்கியமானவை ஐந்து. அவை கட்டாய இந்தி, வகுப்புரிமையின்மை, பார்ப்பன ஆதிக்கம், பள்ளிகளை மூடுதல், பகுத்தறிவாளாமை என்பன.

**இந்தியா ஒரு நாடன்று: பல நாடுகளையுடைய உட்கண்டம். ஐரோப்பா முழுவதும் நாசியராட்சியில் ஒன்றாய்த் தோன்றுவது போல, இந்தியாவும் ஆங்கிலராட்சியில் ஒன்றாய்த் தோன்றுகிறது. ஆங்கிலர் வருவதன் முன் இந்தியா பல நாடு: இன்றும் பல நாடு. ஒருபோதும் இந்தியா, ஒரு நாடாயிருந்ததில்லை.** எதிர்காலத்தில் ஒரு நாடாகலாம். ஆனால், அதற்கு முன் ஒரு குலமாக வேண்டும். ஆரியம் இந்தியா முழுதும் பரவியிருப்பதால், இந்தியா ஒரு நாடென்று கொண்டால், ஆரியர்க்குமட்டும் மிகுந்த வசதியுண்டு, அதனால்தான் அவர் ஒரு நாடென்கின்றனர்.

இந்தியாவுக்கு இப்போது ஆங்கிலம் பொதுமொழியாக உள்ளது. அது உலகப் பொதுமொழி: சிறந்த கலை நூல்களைக் கொண்டது; அடிமைத் தன்மையை நீக்கி அறிவை விளக்குவது; சமுதாயத்தைச் சீர்திருத்துவது; மொழிச்சண்டைக்கு இடந்தராதது. ஆகையால் வேறொரு பொதுமொழி வேண்டுவதில்லை. வடமொழியும், வடஇந்திய மொழிகளும், ஆங்கிலமும் ஓரினமாதலின், ஆங்கிலத்தை அயன்மொழியென்ன முடியாது! ஆரிய மொழிகளைப் பேசுபவரே ஓர் ஆரிய மொழியை வெறுப்பின், திராவிடத் தனிமொழியைப் பேசுபவர் எங்ஙனம் இந்தியாகிய ஆரியமொழியை ஏற்கமுடியும்? ஆங்கிலத்தினும் அண்மையாயிருப்பதால் மட்டும் இந்தி இனமொழியாகி விடாது. பகைவன் அண்டை வீட்டில் குடியிருப்பதால் மட்டும் நண்பனாகி விடமாட்டான்.

"உடன் பிறந்தார் சுற்றத்தார் என்றிருக்க வேண்டா
உடன்பிறந்தே கொல்லும் வியாதி - உடன்பிறவா

மாமலையில் உள்ள மருந்தே பிணிதீர்க்கும்
ஆமருந்து போல்வாரு முண்டு.”

தொடர்ந்து ஆரிய மொழியில் தமிழுக்கு விளைந்த கேடு கொஞ்ச நஞ்சமன்று: அதோடு இந்தியும் வரின் தமிழ் பெருங்கேடுறும் என்பதற்கு ஐயமின்று. ஆங்கிலம் அயன்மொழிகளால் வளர்ந்தது போலத் தமிழும் வளரும் என்று கருதுகின்றனர் சிலர் அவர் அறியார். ஆங்கிலத்திற்குத் தமிழ்மொழித் துணை இன்றியமையாதது. தமிழுக்கு அங்ஙனமன்று.

இப்போது வழங்கும் பேச்சுத்தமிழ் அரைத்தமிழே. வடமொழியால் கால் தமிழும் ஆங்கிலத்தால் கால் தமிழும் போய்விட்டன. இனி இந்திவரின், கால் தமிழ்தான் வழங்கும். அதற்கும் அரசியல் தாங்கல் (ஆதரவு) இன்மையால், அதுவும் ஒரு காலத்தில் நீங்கும். **மொழியே ஒரு நாட்டு நாகரிகத்தின் கருவூலம். மொழி நீங்கின் நாட்டு நாகரிகமும் நீங்கும்.**

ஆண்டை 'வருஷமென்றும்', மகிழ்ச்சியைச் 'சந்தோஷமென்றும்', சிவபோற்றி என்பதைச் 'சிவாய நம' வென்றும் அம்மையப்ப வணக்கம் என்பதை 'நமப்பார்வதீ பதயே' என்றும் தாய்நாடே போற்றி என்பதை 'வந்தேமாதரம்' என்றும், புத்தூழி வெளியீட்டகம் என்பதை 'நவயுகப்பிரசுராலயம்' என்றும், நிலுவையைப் 'பாக்கி' என்றும், தாழ்வில்லை அல்லது குற்றமில்லை என்பதைப் 'பரவாயில்லை' என்றும், குழுவைக் 'கமிட்டி'யென்றும், மேற்சட்டையைக் 'கோட்டு' என்றும் அயன்மொழிச் சொற்களைக் கங்குகரையின்றி வழங்கிக்கொண்டு, அவற்றைத் தமிழென நினைப்பது அவலை நினைத்துக்கொண்டு உரலையிடிப்பதாகு மன்றோ?

**தமிழுக்குத் தமிழ்ப் புலவர்களே அதிகாரி. தமிழ்த் தற்காப்புக்காக அவர்கள் ஏதேனும் செய்தால் வேலையிழப்பும் சிறைத்தண்டனையும் நேர்கின்றன. இந்நாட்டில் தமிழர்க்குத் தமிழைப்பற்றிப் பேச உரிமையில்லாவிட்டால், இதினும் கொடிய அடிமைத்தனமும் உண்டோ?**

தேவரும் அசுரரும் சேர்ந்து திருப்பாற்கடல் கடைந்தாலும், தேவர்க்கு மட்டும் அமிழ்தம் தந்ததைப்போல,

பார்ப்பனரும் தமிழரும் சேர்ந்து விடுதலைக்குப் பாடுபட்டாலும், முந்தினவர்க்கே பலன் கிடைக்கின்றது. தமிழ் நாட்டில் நூற்றுக்கு மூன்று விழுக்காடுள்ள பார்ப்பனர். நூற்றுக்கு அறுபதிற்கு மேற்பட்ட அரசு அலுவல்களைப் பெற்று வருவதும் தமிழ்நாட்டையே ஆள்வதும், குடியரசுக்கும் தமிழர் உரிமைக்கும் ஏற்றதன்று. குலப்பிரிவினையுள்ள வரையில் தனித்தொகுதி இருந்துதான் தீரவேண்டும். நடைமுறையில் குலப்பிரிவினை காட்டிக்கொண்டு, சொல்லளவில் அதை மறுப்பது, ஒரு பண்டத்தைக் காக்கை தூக்கிக்கொண்டு போய்விட்டதென்று குழந்தைகளை ஏமாற்றுவதொக்கும்.

**பார்ப்பனர் உண்மையில் தங்களைத் தமிழரைப்போலக் கருதித் தமிழையே வளர்ப்பாரானால், அவர்கள் தமிழ்நாட்டை வழிவழியாண்டாலும் தமிழ்ப் புலவருடைய எதிர்ப்புச் சற்றுமிருக்காது. அதற்கு மாறாகத் தங்களைத் தமிழரென்று சொல்லிக்கொண்டு, ஆரியத்தையே வளர்த்துத் தமிழைத் தளர்ப்பது பொறுக்கத்தக்கதன்று.**

சிலர் பார்ப்பனருக்குத்தான் படிப்புத் திறமையுள்ளதென்றும், அதனால்தான் அவர்க்கு அலுவற்பேறென்றுங் கூறுகின்றனர். திறமைபற்றி வேலையாயின், பார்ப்பனர் ஏன் நகரக்காவல் (போலீஸ்), கிளையத்தில் (இலாகாவில்) புகவேண்டும்? அவர் உண்மையில் வீரராயின். படைத்துறையில் (இராணுவத்தில்) ஏன் ஒருவர்கூடச் சேர்வதில்லை. நகரக் காவலிலும் தலைவராக மட்டும் ஏன் இருக்க வேண்டும்?

தமிழர்க்கு ஆயிரம் ஆண்டுகளாக உயர்தரக் கல்வி இல்லை. பார்ப்பனரோ ஐயாயிரம் ஆண்டுகளாக வழிவழியாகக் கற்றுக் கல்வியைக் குலத்தொழிலாக்கிக் கொண்டனர். இதனால் சிறிது வேறுபாடுண்டு. தமிழர்க்கரசு உதவியிருப்பின் இரண்டொரு தலைமுறையில் இக்குறை நீங்கிவிடும்.

தமிழ்நாட்டில் நூற்றுக்குத் தொண்ணூறு பேர் தற்குறிகளாயிருப்பவும், சேலம் கோட்டகை (ஜில்லாவில்) மதுவிலக்கென்று, 250 பள்ளிகளைச் சாத்தி மதிவிலக்குச் செய்தது பெருங்கேடாகும். அதைப் பின்பற்றி. இன்று கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளிக் கோட்டகைகளிலும் 200, 300 ஆகப் பள்ளிகள்

சாத்தப்பட்டுள்ளன. ஒரு நாட்டின் முன்னேற்றத்திற்குக் கல்வியே அடிப்படை. மேனாடுகளில் 100-க்குத் 90-பேர் படித்திருப்பதால்தான், அவர்கள் முன்னேறி வருகின்றனர். அடிமைத்தனமும் அறியாமையும் நீங்க வேண்டிய குடியரசு காலத்தில் நூற்றுக்கணக்கான முன்முறைப் (*primary*) பள்ளிகளைச் சாத்தி, மக்களைக் குருடாக்குவதும் நூற்றுக்கணக்கான ஆசிரியர்க்கு வேலையில்லாமற் செய்வதும் நன்றன்று. பள்ளிகளில் குறையிருந்தால் திருத்தவேண்டும். முன்முறைக் கல்விக்கும் கட்டாயக் கல்விக்கும் மட்டும் எவ்வளவு செலவானாலும் செலவிடத்தக்கதே. **அறியாமை விலக்கே மது விலக்கினும் முற்பட்டுச் செய்யவேண்டிய சீர்திருத்தமாகும்.**

காங்கிரசால் தமிழர்க்கு விளைந்த தீங்குகளில் மிகக் கொடியது எதுவென்றால், பகுத்தறிவைப் பயன்படுத்தாதபடி, கட்டொழுங்கின் (***Discipline***) புகட்டப்பட்ட வாயடக்கியலாகும். மற்ற என்ன சொன்னாலும் அதன் உண்மையை உணராமலும், காங்கிரசிற்காக எல்லாவற்றையும் இழப்பதென்றும், திராவிட உயர்வு பற்றியதெல்லாம் கைவிடுவதென்றும், ஆரிய உயர்வு பற்றியதெல்லாம் வரவேற்கத்தக்கதென்றும், காங்கிரசு தலைவர் கூறுவதெல்லாம் மறைமொழி (வேதவாக்கு)யென்றும், குருட்டுத்தனமாய்க் காங்கிசைப் பின்பற்றுவது தமிழராக்கத்தையே வேரறுப்பதாகும். ஆகையால், தமிழ்விடுதலையும், தமிழ் வளர்ச்சியும் குறிக்கோளாக் கொண்டதொரு புதுக்கட்சி ஏற்படுத்தவேண்டும். அல்லது காங்கிரசில் இருந்துகொண்டே தமிழுக்குழைக்க வேண்டும்.

**வடநாட்டுத் தலைவர்கள் தேசியத்திற்காகப் பாடுபட்டதனால், தமிழர் தமிழ்நாட்டையும் தமிழையும் இழக்க முடியாது. தமயந்தியைப் பாம்பினின்றும் தப்புவித்த வேடன் அவளுக்குக் கணவனாக முடியாதே!**

**தமிழர் எல்லாவற்றையும் இழந்து தமது மொழியைமட்டும், செல்வமாகக் கொண்டிருக்கின்றனர். எதுவரினும் எதுபோயினும் தமிழைமட்டும் தமிழர் விடார் என்பது திண்ணம்.**

**தமிழ் வாழ்க!**



சூரம்பட்டியின் முதல் ஆசிரியர்

# மா. இரா. குகநாதப் பிள்ளை

# கொடைவள்ளல் குகநாதர்

நற்றமிழர் பாராட்டுக்கும், போற்றுதலுக்கும் உரியவர் பேராசிரியர் முதல்வர் திருமாறனார். பாவாணர் தமிழியக்க அமைப்பாளர்; தஞ்சை நாவலர் ந.மு.வே. திருவருள் கல்லூரி முதல்வர். தமிழே வாழ்வாகிய தவத்தோன்றல்!

முனைவர் திருமாறனார் புகழ்மிக்க தந்தையார், குகநாதனார். அவர்தம் நூற்றாண்டுவிழா சூரம்பட்டியில் அவர் நிறுவிய தொடக்கப்பள்ளி வளாகத்து நிகழ்கின்றது.

குகநாதனார் கல்விக்கண் வழங்கிய கண்ணப்பர். அவர் காலத்தில் கல்வி, சிற்றூர்ச் சிறார்க்கு எட்டாக் கனி; எங்கேயோ ஒரு பள்ளிக் கூடம்! அங்கே சென்று படிக்க வாய்ப்பு இல்லாமல் வீடே வேலையே என்று இருப்பார் தம் பிள்ளைகள் கல்விகற்க வகை ஏது?

ஊரிலே பள்ளி இல்லாமல், உழைப்பாளர் உழவர் குடும்பங்கள் கல்வியை எண்ணவும் முடியுமா? எண்ணினார் குகநாதர். தாம் முயன்று கற்ற உயர்தரப் பள்ளிப் படிப்புடன் ஆசிரியப் பயிற்சி பெற்றார். ஆசிரியத் தகுதி அடைந்தவர்க்கு அந்நாளில் வேலைவாய்ப்பு தேடித் தேடிவரும். எங்கே சென்றும் எளிதில் வேலை பெறலாம். பள்ளி, ஆசிரியரைத் தேடித்தேடி அலைந்த காலம் அது. இருபதாம் நூற்றாண்டின் முதற்பகுதி அது.

குகநாதர் வேற்றூர் சென்று வேலைபார்க்க விழைந்திலர். நகர வாழ்க்கையே வாழ்க்கை எனக் கற்றவர் பெரிதும் தாம் பிறந்த ஊரை விடுத்துப் பெருநகரங்களை விரும்பிய காலம். அக் காலத்தேதான், தாம் கற்ற கல்வி தம் ஊர்க்கும் தம் ஊர் சார்ந்த ஊர்களுக்கும் பயன்படவேண்டும். பிறந்த மண்ணுக்குத் தாம்பெற்ற இன்பக் கல்வியை வழங்குதலே தம் கடன் என உணர்ந்தார். தாமே பள்ளி ஒன்றை அமைத்தார். தம் வாழ்நாளெல்லாம், தம் மண்ணுக்கு ஒளி விளக்கை ஏற்றி ஊரவர் போற்றும் ஆசிரிய மணியாகவே திகழ்ந்தார். அவர் பள்ளியை நிறுவிய காலம் 1933. பள்ளி நிறுவனர் அவர். அதன் செயலர் அவர். அதன் தலைமை ஆசிரியர் அவர். மனிதர்காள் இங்கே வாருங்கள்! 'கனி தந்தால் கனி உண்ண வல்லிரோ' என அப்பரடிகளைப்

போலக் கையை உயர்த்தி நீட்டி ஊரவரை அழைத்தார். அழைப்பவர் எவர்? எளிய அழைப்பா? எவரோ அழைக்கும் அழைப்பா? ஊர் நலம் நாடி உவந்து அழைத்த அவ்வழைப்பை ஊரவர் உவந்து போற்றினர்! குகநாதர் ஊர் ஆனார்! ஊர் குகநாதர் ஆயது! அவர் பெற்ற நலம் ஊர் நலம் ஆயிற்று.

ஓர் ஆசிரியமணியின் உயரிய எண்ணமும் ஓயா உழைப்பும் பக்கமெல்லாம் பரவியது. பக்கத்தூரும் பயன்பட்டது. குகநாதர் குடும்பம் கல்விக்கண் தரும் குடும்பம் ஆயிற்று. தம்மில் தம் மக்கள் அறிவுடைமை மாநிலத்து மன்னுயிர்க் கெல்லாம் இனிது என்றாற் போல ஊரவரை ஊட்டிவளர்த்த உயர் தோன்றலை ஊர் தலைமேல் வைத்துக் கொண்டாடியது. குகநாதர் குடும்பம் எடுத்துக்காட்டாம் குடும்பம் ஆயிற்று!

தொடக்கப்பள்ளி ஆசிரியர்தாமே இறைவனுக்கு ஒப்பானவர். எழுத்தறிவித்தவர் அவர் அல்லரே!

"எழுத்தறிவித்தவர் இறைவர் ஆவார்" எனக் குகநாதர் இறைமையர் ஆனார். அவரிடம் பயின்று பக்கம் பக்கம் பரவிச் சென்று மேலும் கல்வியைப் பெருக்கி ஆசிரியராய், பொறிஞராய், மருத்துவராய் - அலுவலராய் - பிறபிற தொழிலராய் - திகழ்வார் எத்தனை எத்தனைப் பேர்கள்! ஒற்றைத் திரிவிளக்கு ஓராயிரம் திரிவிளக்கு பற்றி எரிந்து ஒளிசெய்ய வாய்த்தது போல் ஊர்மக்கள் அனைவரும் கல்வி என்னும் அழியாச் செல்வம் பெற்றனர். பணி வாய்ப்புப் பெற்றனர். வழிவழியாக ஓங்கி உயர்ந்தனர்!

குகநாதர் மக்களைப் பாருங்கள்! தந்தை தொடங்கிவைத்த கல்வியைத் தொடர்ந்து பரப்பும் புரவலர் ஆயினர். அறக்கட்டளை அமைத்து மேல்வளம் சேர்க்கின்றனர். நாடறி புலமைச் செல்வராய் தொண்டராய்த் திகழ்கின்றனர். 'தாய் எட்டடி குட்டி பதினாறடி', 'தந்தை அறிவு மகனறிவு' என்னும் பழமொழிகளை மெய்யாக்கித் திகழ்கின்றனர். ஊரும் உறவும் அறிய உயர்ந்த ஒரு பெருமகனார் கொடை, நாடறி உலகறி பொருளாகத் திகழ்ந்து வருதல் அவர் தக்கார் என்பதன் சான்றாம்!

குகநாதர் எளிய வாழ்வர்! இறைவன் பெற்றியுள் ஒன்று 'எளிவந்த பிரான்' என்பர். எளிவருதல் இறைமைக்கு மட்டுமன்று. எக்குடும்பத்திற்கும் எப்பதவியர்க்கும் எத்தலைமையர்க்கும் இன்றியமையாப் பண்பாம்! எங்கள் பேரன்புத் தோன்றல், மாந்த நேய மாண்பர், கடனறி கட்சியர் திருமாறரைப் பாருங்கள்! தலைவர்க்குத் தலைவர்! தொண்டர்க்குத் தொண்டர்! இவ்வரிய பேற்றை எவரிடம் எங்கே பெற்றார்? குடிமையின் குறையிலாக் கொடை என்பது விளக்கம் அல்லவா! சூரம்பட்டிக் குழந்தை, திருச்சி, தஞ்சை மட்டுமா, தமிழ் நாடு மட்டுமா, தமிழ் உலகமே கொண்டாடக் கோலோச்சுகின்றது அல்லவா! இது எதனால்?

குகநாதர் ஊட்டிய கல்வி, ஊட்டிய பண்பாடு, காட்டி வளர்த்த கனிவு எல்லாமும் கூட்டிய கூட்டமுது - பாட்டமுது திருமாறர் எனத் திகழ மணிமுடி சூட்டியவர் எவர்? அந்தக் குகநாதர் தாமே! திருமாறர் மட்டுமா? குகநாதர் மக்கள் அனைவரும் குன்றா வளமையர்! குறைவிலா வாழ்வர்! மக்களின் மக்களோ, அவரினும் மேம்பட்டார்! ஒரு வீடு பெற்றபேறு நாடு பெற்ற பேறும் உலகம் பெற்ற பேறுமாகத் திகழ வைத்த வித்தகர் குகநாதர் எனல் சாலும்! வள்ளுவர் கண்ட சாவா வாழ்வுச் சால்பர் அவர் என்பதன் விளக்கம் இஃதாம். கல்விக் கொடைவள்ளல் குகநாதர் புகழ் வாழ்க!

சூரம்பட்டி
*16.02.2009*

**இரா. இளங்குமரனார்**



**மெல்லுடலும் வினைத்திட்பம்**
**மிகுமனமும் உடையவர்தாம்**
**- அவரே போலும்**

**சொல்லுறுதி பொருட்செறிவு**
**சுரந்திடவே எழுதுபவர்**
**- அவரே போலும்**

**வல்லமையாய்ச் செயலாற்றி**
**வாகைபெறும் ஆற்றலர்தாம்**
**- அவரே போலும்**

**எல்லவர்க்கும் நட்புடையார்**
**இன்குணத்தர் திருமாறன்**
**- அவரே போலும்**

**பெரும்புலவர் ப. அரங்கசாமி**

## பேராசிரியர் முனைவர் கு. திருமாறன்

சிராப்பள்ளி மாவட்டம், முசிறி வட்டம், சூரம்பட்டியில், ஆசிரியர் குகநாதருக்கும் திருமதி பாப்பு அம்மாளுக்கும் 1941 டிசம்பர் 26 - ஆம் நாள் தமிழ் மகவாகத் தோன்றியவர் பேராசிரியர் முனைவர் கு. திருமாறன்.

மகவு முகம் பார்த்துப் பெயர் வைத்தார் போலும் குகநாதர். மாறன், பாண்டியப் பேரரசர்களின் இனமரபுப் பெயர். தமிழ்நாட்டு வரலாற்றில், சங்க காலந்தொட்டுப் பதினெட்டாம் நூற்றாண்டுவரை, தொடர்ந்து காட்சியளிக்கும் ஒரே அரச மரபு பாண்டியர்களுடையதுதான். ‘கோமாறன்’ என்று தான் அவர்களுடைய கல்வெட்டுச் சுட்டல்கள், தொடக்கங்களில் அமைந்தது. வீரமும், வெற்றி தோல்விக்கு அஞ்சாத விடா முயற்சியும் மாறன் சொத்து. சூரம்பட்டி மகவின் முகத்தில் குகநாதர் அந்த முத்திரையைக் கண்டிருக்க வேண்டும். அதனால்தான், நம் பேராசிரியர் பெயரின் பின்பகுதி மாறன் என்றமைந்தது.

‘திரு’ மரியாதைக்குரியது மட்டுமன்று, வணக்கத்திற்குரியதும் கூட, அது செல்வத்தை மட்டும் குறிக்கும் சொல்லன்று. அதனால்தான், தஞ்சாவூரில், தமிழர் தலைநிமிர்த்தும் கட்டடக்கலை அற்புதத்தை உருவாக்கிய முதல் இராசராசர் கூடத் தம் மெய்க்கீர்த்தியின் முதற் சொல்லாகத் ‘திரு’ வைக் கொண்டார். திருமகள் போலப் பெருநிலச் செல்வியும் எனத் தொடங்குகின்றன அவர் வரலாறு பேசும் கல்வெட்டுத் தொடர்கள்.

பெயரின் பிற்பகுதியைப் பாண்டியர்களிடமிருந்தும் முற்பகுதியைச் சோழச் செம்மாப்பிலிருந்தும் தேர்ந்தெடுத்துப் பொருத்தமுற இணைத்த குகநாதர் பெருமைக்குரியவர். அவருக்குத் தெரிந்திருக்கிறது, இந்தப் பிள்ளை தமிழ்ப்பிள்ளை, வீரமும் விவேகமும் கொண்ட பிள்ளை என்பதெல்லாம். அய்யா திருமாறன் தமிழ்நாட்டின் நான்கு திசைகளில் கல்வி பயின்றவர் - சிறப்புப் பயிற்சிகள் - இதழியல், மக்கள் தொடர்பியல், சிவனியக் கொண்முடிபு, கல்வெட்டியல்.

7 ஆண்டுகள் அரசு உயர்நிலைப் பள்ளிகளில் ஆங்சில ஆசிரியராகவும் 30 ஆண்டுகள் அரசு கல்லூரிகளில் தமிழ்ப்பேராசிரியராகவும் 8 ஆண்டுகள் தஞ்சாவூர்த் திருவருள் கல்லூரியில் மதிப்பியல் முதல்வராகவும் பணியாற்றிய இப்பெருந்தகையின் மாணவர்கள் தமிழ்நாடெங்கும் பரவியுள்ளனர்.

பணியிலிருந்த காலத்தில், அரசு கல்லூரி ஆசிரியர் கழகத்திலும், ஆசிரியர் இயக்கத்திலும், பல நிலைகளில் பொறுப்பேற்றுத் தொண்டாற்றியவர். ஆசிரியர் நிலை உயர, வாழ்வு சிறக்கப் பல போராட்டங்களை முன்னெடுத்தவர். மாறன் அல்லவா, அதனால், முன்வரிசையில் நின்று முதலில் சிறை சென்றவர். திருச்சிராப்பள்ளி நடுவண் சிறை இவரது வாழ்க்கையின் ஒரு பகுதியைப் பார்த்துள்ளது. அங்கும் அனைத்துக் கல்லூரிச் சிறைப்பட்டோர் செயற்பாட்டுக் குழுவின் தலைவராக விளங்கி, 'இவரை வெளியே விட்டால்தான் அமைதி' என்று தளைப்படுத்தியவர்களையே தடுமாற்றம் கொள்ள வைத்தவர்.

இவரது முனைவர் பட்ட ஆய்வேடு 'தனித் தமிழ் இயக்கம்'. தேவநேயப் பாவாணர், தெ.பொ. மீனாட்சி சுந்தரனார் ஆகிய தமிழ் முன்னோடிகளின் சிந்தனைகளை, இளம் தலைமுறை அறியுமாறு, தொகுத்து நூல்களாக்கியவர். இவரது அணிந்துரைகள் 'தோழமையுடன்' என்ற தலைப்பிலும் வானொலிப் பொழிவுகள் 'முன்றாவதுகண்'ணாகவும் நூல்களாகியுள்ளன.

மிகச்சிறந்த பதிப்பாசிரியராகத் திகழ்வதால், தமிழறிஞர் நூல்களைத் தளர்ச்சியின்றிப் பெருந்தொகுதிகளாக வெளியிட்டுக் காத்துவரும் தமிழ்மண் பதிப்பகம், இவர் கண்ணோட்டத்தில் பாவாணர், பாரதிதாசன், நாவலர் ந.மு. வேங்கடசாமி நாட்டார் தம் நூல் தொகுப்புகளைப் பதிப்பித்துள்ளது.

தமிழ்ப் பல்கலைக்கழகம், பாரதிதாசன், மனோன்மணியம் சுந்தரனார், சென்னைப் பல்கலைக்கழகம் ஆகியவற்றில் சிறந்த அறக்கட்டளைப் பொழிவுகளை வழங்கியுள்ள, இப்பெருந்தகையின் வானொலிப் பொழிவுகளும், மேடைப் பொழிவுகளும் எண்ண முடியாதவை.

எங்கெல்லாம் 'தமிழ்' ஆளுமை கொள்கிறதோ, அங்கெல்லாம் திருமாறன் இருப்பார் எனும்படி தமிழ்நாட்டின் எட்டுத் திசைகளிலும் இவரது திருவடிகள் மேடை தொட்டுள்ளன. வாய்மொழிகள் தமிழ்ச் சிந்தனைகளை வளர்த்துள்ளன.

இதுவரை சொன்னவற்றுள் பல தகுதிகள் தமிழ்நாட்டின் தலைசிறந்த பேராசிரியர்கள் பலருக்குண்டு; எனில் அய்யா திருமாறனுக்கு ஏன் பழனியாண்டியின் சிறந்த தமிழறிஞர் விருது?

இந்த மேடையில் இதுவரை தமிழறிஞர் விருதுபெற்ற பேரறிஞர்கள், தமிழுக்கு அருந்தொண்டாற்றிய ஆற்றலாளர்கள். மிகத் தேர்ந்தே, அவர்தம் பணிகண்டு மிக வியந்தே, அதன் பயன் கண்டு உளம் உவந்தே மருத்துவர் பழனியாண்டி விருதினை அவர்களுக்கு அளித்து, இந்திய மருத்துவ மன்றத் திருச்சிராப்பள்ளிக் கிளை உள்ளம் கனிகொண்டு நிறைந்திருக்கிறது.

பேராசிரியர் திருமாறன் சிறந்த தமிழறிஞர் மட்டுமல்லர். சிறந்த தமிழ்ப் போர்வீரர். 1998 - இல் சான்றோர் பேரவை நடத்திய தமிழ்ப் பயிற்றுமொழிப் போராட்டத்தைச் சிராப்பள்ளியில் முன்னெடுத்து நிகழ்த்தியவர்.

எங்கெல்லாம் தமிழுக்குக் குறைவு நேர்கிறதோ, தீங்கு நிகழ்கிறதோ அங்கெல்லாம் முன்வரிசையில் முதலாளாகத் திருமாறனைக் காணலாம்

சொல்லொன்று, செயலொன்று இல்லாத நேர்மையாளர். அவர் சிந்தனையில் தமிழ். நா நிறையத் தமிழ். பார்க்கும் பார்வையில் கூடத் தமிழ்.

திருமாறனைப் பாரதிதாசன் பரம்பரையைச் சேர்ந்தவராகக் கொள்ளமுடியும். திருவள்ளுவர் தவச்சாலை நிறுவுநர், அய்யா முதுமுனைவர் இரா. இளங்குமரனாரின் வழித்தோன்றலாகவும் பார்க்க முடியும்

சினச் சீறலுடன் பேசுவார், எங்கேனும் தமிழுக்கு ஏதேனும் குறையென்றால், 'ஒண்டமிழ்த் தாய்ச்சிலம்படியின் முன்னேற்றம், ஒவ்வொன்றும், உன் முன்னேற்றம்' என்ற கொள்கையர் என்பதனால்.

சிரித்த முகத்தினராய், உள்ளம் குழையவும், தீந்தமிழில் உரையாடி அறிவு செய்வார், எதிர் இருப்பார் இன்தமிழின் பெருமைக்குப் பெருமை சேர்ப்பவர் என்பது திண்ணமானால்.

உள்ளும் புறமும் தமிழாய் வாழ்வதால், ஆங்கிலத்தில் வல்லாராய் இருந்தபோதும், ஆங்கில மொழி பெயர்ப்புகள் சில செய்திருந்தபோதும், பிறமொழிச் சொல் கலவாத தமிழ் உரையாளராய்த் திகழ்கிறார்.

பரந்துபட்ட பட்ட படிப்பாளர். சங்க இலக்கியங்களில் உள்ள தோய்வு, நான் நுகர்ந்திருக்கிறேன் முப்பதாண்டுகளாக அய்யா திருமாறனுடன் தொடர்பில் உள்ளமையால். அந்தத் தமிழ்க் காற்றைத் தென்றலாய்த் தழுவி வளர்ந்திருக்கிறேன்.

அவருடைய நூல்நேயம், நல்ல நூல்களின் நயம் போலவே நுண்ணியது. புதியன படிப்பதில், படிப்பதைப் பகிர்வதில், கேட்பதைச் சொல்வதில், சொல்வதைச் செய்வதில் அவருக்கு இணை அவரே.

தமிழ், பலர் பேச்சில், நம் செவிகளை நிறைத்ததுண்டு. அடுக்கு மொழியாகவும், கவிதைச் சாரலாகவும், கதைத் தோரணங்களாகவும், நிகழ்வுப் பொதிகளாகவும். இந்த அரங்கில், தமிழ் விண்ணையும் மண்ணையும் அளந்தது கண்டு மகிழ்ந்து நிறைந்தவர்கள் நாம்.

அயல் சொல் கலவாத தமிழ் அரியது. பெரும்புலவர் இளங்குமரனார் போல் ஒருசிலருக்கே அது இயலுவது. அந்த வழியினர் திருமாறன். இராசமாணிக்கனார் என்ற என் தந்தையின் பெயரைக் கூட அரசமாணிக்கனார் என்றே சொல்பவர். 'இராஜ' அவருக்கு ஒவ்வாதது.

இன்றைய உரை அறிவியல் என்பதால் அயல்சொற்கள் தவிர்க்க முடியாமல் உரையில் இடம்பெறுமா, அறியேன். எந்தச் சொல்லையும் இன்தமிழாக்க வல்லவரென்பதால் அறிவியல் அனைத்தும் தமிழாய் மலருமா, அல்லது அவைக்கு விளங்க வேண்டும் என்பதால், இன்று மட்டும், இங்கு மட்டும், அயல் சொற்களும் தமிழுடன் மிடைந்து வருமா, அதுவும் அறியேன்.

இவர் வாழ்வரசியார் பங்கயம், அறிவியல் ஆசிரியராக இருந்து பணிநிறைவு செய்தவர். மகன் தென்றல் - பள்ளி ஆசிரியர் - மகள் வழிப் பெயர்த்தி ஆதிரை. மகன் இனியன், தகவல் தொழில்நுட்ப வல்லுநர், மகன்வழிப் பெயர்த்தி இன்னிலா. வாழ்க்கையின் பெரும் பேறுகளாக, அய்யா திருமாறன் கருதுவது, பேராசிரியர்கள் தி.சே. பாலசுப்பிரமணியன், இரா. இராதாகிருட்டிணன், த. மணிமாறன் ஆகியோரிடம் தமிழ் பயின்றமை.

பேரூர், சாந்தலிங்க அடிகளாரிடமும், தமிழண்ணலிடமும் அணுக்கமாயிருந்து தமிழில் தேர்ந்தமை.

முதுமுனைவர் இளங்குமரனாரின் கருத்துக்குகந்த கனித்தமிழ்த் தொண்டராய் அவருக்குத் தோள்தந்து தமிழ்ப் பயணம் மேற்கொண்டமை.

**சொந்த ஊரான சூரம்பட்டியில் கல்லூரி அளவில் பட்டம் பெற்ற முதல் மனிதர், முதல் முனைவர், முதல் நூலாசிரியர், சிராப்பள்ளிப் பாவாணர் தமிழியக்கத்தின் உயிர்வளி.**

தொண்டு செய்வாய்! தமிழுக்குத் துறைதோறும், துறைதோறும் துடித்தெழுந்தே! என்றார் பாரதிதாசன். அந்தப் பாதையில் நிகரற்ற தலைமையராய்த் திருமாறன்.

தமிழை மூச்சாகவும் பேச்சாகவும் கொண்டியங்கும் தனித்தமிழ் வேந்தே, உங்கள் தமிழ்ப்பற்றுக்கும் தொண்டுக்கும் எங்கள் தலைதாழ்ந்த வணக்கம்.

இரண்டாயிரத்து இருபதின் சிறந்த தமிழறிஞராக உங்களைத் தேர்ந்து, மருத்துவர் சு. பழனியாண்டி அறக்கட்டளையின் விருது வழங்குவதில் இந்திய மருத்துவமன்றச் சிராப்பள்ளிக் கிளை இறும்பூதெய்கிறது. தொடர்க உங்கள் தனித்தமிழ் இயக்கம். தொடர்க உங்கள் தமிழ்த்தொண்டு. நன்றி, வணக்கம்.

திருச்சிராப்பள்ளி,

*26.01.2020* **இரா. கலைக்கோவன்.**

**மாண்மணியாய் வாழியவே!**

குருநாதக் கொடைவள்ளல்
குகநாதர் திருவாய
திருமாறத் திருச்செல்வர்
தீந்தமிழே வாழ்வாகி,
'வருபேறு' கருதாது
'வளத்தொண்டு செய்வதுவே
வருபேறும் வளப்பேறும்'
எனவாழ்வார் வாழியவே!

ஆற்றுகின்றார் மேலேதான்
ஆம்பாரம் எல்லாரும்
ஏற்றுகின்றார் என்பதுபோல்
ஏற்கின்ற பொறுப்பெல்லாம்
போற்றுவகை செய்கின்ற
புகழாளர் என்றென்றும்
மாற்றுநிலை இல்லாதார்
மாண்மணியாய் வாழியவே!

செந்தமிழ் அந்தணர்
முதுமுனைவர் **இரா. இளங்குமரனார்.**

## வெளியீடு

சூரம்பட்டி ஆசிரியர்

**மா. இரா. குகநாதப் பிள்ளை**

நினைவு அறக்கட்டளை

672, பெரியார் சாலை

கலைஞர் கருணாநிதி நகர்

திருச்சிராப்பள்ளி - 620 021

தமிழ்நாடு

பேசி : 94439 95657

அன்புடன்

**தென்றல் நாகராசன்**

**இனியன் திருமாறன்**

திருவள்ளுவராண்டு 2052 சிலை (மார்கழி) 11


(26.12.2021)

பாவாணர் தமிழ்மொழிக்கும் நாட்டுக்கும் இடைவிடாத நற்றொண்டாற்றி நம் அனைவரின் நிலையினையும் உயர்த்தியவர்.

அவருடைய புலமையும் தெளிவும் துணிவுமிக்கது. தமிழின் தூய்மையும் வளமும் எத்தகையது என்பதை ஆய்ந்தறிந்து தெரிவித்த பெருமகனாரிடம் எவருக்கும் பெருமதிப்பு ஏற்படாதிருக்க முடியாது.

தமிழ்ப் பெருநூல்கள் தமிழரால் நன்கு கற்று உணரப்பட்டு, தமிழ் நெறியில் தமிழர் நின்று வென்றிடல் வேண்டுமென்பதில் தளராத விருப்பம் கொண்டோர்க்கெல்லாம் பாவாணரின் புலமை நம்பிக்கை தந்து வருகின்றது.

-பேரறிஞர் அண்ணா



**கு. திருமாறன் - இரா. பங்கயம்**

**பேராசிரியர், முனைவர் கு. திருமாறன்**
**எண்பதாம் அகவை நிறைவு வெளியீடு**

Print @ The Printing House, Try- 23.Ph:0431-2420121